# ஆண்டறிக்கை 2009



தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

# ஆண்டறிக்கை

# 2009

தொகுப்பு

**திட்டப்பிரிவு**

**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை**

**சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சு**



## சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சின் கௌரவ அமைச்சரின் செய்தி

சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கி வருகின்ற தேசிய சிறுவர் பாதுகாப்பு அபிவிருத்தி சபை மூலமாக வெளியிடப்படுகின்ற 2009 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கைக்காக வாழ்த்துச் செய்தியை விடுக்க கிடைத்தமையை இட்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

எமது நாட்டின் பெறுமதி மிக்க செல்வமான சிறுவர் சந்ததியைப் பாதுகாத்தலானது எம்மனைவரிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ள மாபெரும் பொறுப்பாகும். சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சு அரசாங்கத்தின் சார்பில் அப்பொறுப்பினை வகிக்கின்ற பிரதானமான அரச நிறுவனம் ஆகும். எமது அமைச்சினைப் போன்றே விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரெனும் வகையில் எங்களிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ள மேற்படி பொறுப்பினை ஈடேற்றுகையில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அபிவிருத்தி சபை ஆற்றி வருகின்ற சேவை மிகவும் பாராட்டத்தக்கது. சிறுவர் உரிமை களைப் பாதுகாத்தல், சிறுவர் துஷ்ப்பிரயோகங்களை ஒழித்துக்கட்டுதல் மற்றும் சிறுவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குதல் ஆகிய விடயங்கள் மீது அதிக கவனம் செலுத்துகின்ற தேசிய சிறுவர் பாதுகாப்பு அபிவிருத்தி சபை ஆண்டுக்கு ஆண்டு புதுத்தன்மையை பெற்றுக்கொடுத்து அமுலாக்கி வருகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய அறிக்கை யொன்றைத் தயாரித்து அரசாங்கத்திடம் ஒப்படைத்தலையும் பிரசுரித்தலையும் மேற்கொள்ளக் காரணம் தனது சேவைப்பொறுப்பு மிகப் பெயரிது என்பதாலாகும்.

2009 ஆம் ஆண்டில் அப்போதைய விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அமைச்சு சபையின் தலைவரும் எமது நாட்டின் சிறுவர் தலைமுறையினருக்காக அளப்பரிய சேவை ஆற்றியுள்ளமை இவ்வறிக்கையை ஆராய்ந்ததன் மூலமாக எனக்குத் தெளிவாகியது.

அக்காலப்பகுதியில் ஆற்றிய சேவைகளைத் தொடர்ந்தும் அமுலாக்கி சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாத்து துர்ப்பிரயோகங்களிலிருந்து சிறுவர்களை மீட்டெடுப்பதற்கான பல்வேறு வேலைத் திட்டங்களை ஏற்கனவெ நடைமுறைப்படுத்தி வருகின்றோம். 1929 சிறுவர் உதவி தொலைபேசி சேவையை இருபத்திநான்கு மணித்தியாலங்களிலும் அமுலாக்கு, சிறுவர் அபிவிருத்தி நிலையச் சேவைகளின் தரத்தை முன்னேற்றுதல், பல்வேறு விதமான விழிப்பூட்டல்கள் மூலமாக பிள்ளை களைத் துர்ப்பிரயோகங்களிலிருந்து மீட்டெடுத்தல் மற்றும் அவர்களின் பாதுகாப்பினை உறுதிப் படுத்துதல் என்பவை அத்தகைய சேவைகளில் சிலவாகும்.

எமது நாட்டுச் சிறுவர்களின் நாளைய தினத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள சிறுவர் அபிவிருத்தி மகளிர் அலுவல்கள் அமைச்சின் தேசிய சிறுவர் பாதுகாப்பு அபிவிருத்தி சபைக்கு சிறுவர்களுக்காக மென்மேலும் சேவைகளை ஈடேற்ற அவசியமான ஆக்கமும் ஊக்கமும் குறைவின்றிக் கிடைக்கட்டுமாக! எனப் பிராத்திக்கிறேன்.

**திஸ்ஸ கரல்லியத்த (பா.உ)**
சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சர்,
சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சு
2011.11.11

**சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சின் கௌரவ பிரதி அமைச்சரின் செய்தி**



மூன்று தசாப்தங்களாக நிலவிய யுத்தம் சிறுவர்களின் எதிர்காலம் மீது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளமை நாம் அறிந்த உண்மையாகும். இந்த யுத்தச்சூழ்நிலை நிலவிய காலப்பகுதியில் தமிழ்ச் சிறார்கள் சிறுவர் சிப்பாய்களாக ஈடுபடுத்தப்பட்டமை மிகவும் கவலைக்குரியதாகும்.

அக்காலத்தில் சிறுவர்களுக்கு கல்வி பயில அவசியமான புத்தகங்கள், பேனை, பென்சிலுக்குப் பதிலாக சயனைட் குப்பிகளைக் கழுத்தில் மாட்டிக்கொண்டு ரீ 56 சுடுபடைக் கலனை அரவணைத்துக் கொண்டு வன்முறைசார் யுத்தத்திற்காக தமது உழைப்பினை அர்ப்பணிக்க நேரிட்டது. அந்த யுகத்தை முடிவுக்கு கொண்டுவந்து சுதந்திரமானதும் அடிமைத்தனமற்றதுமான நாட்டினை எமக்குப் பெற்றுத் தந்தமைக்காக அதிமேதகு சனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ அவர்களின் விடாமுயற்சியை நான் இத்தருணத்தில் மிகவும் பெருமையுடன் நினைவு கூறுகிறேன்.
அதிமேதகு சனாதிபதியவர்கள் சிறுவர்களுக்கு தனித்துவமான இடத்தை உரித்தாக்கிக் கொடுத்தமை நாம் பெற்ற பாக்கியமாகும். இன, மத, சாதி பேதமற்றதாக இலங்கைத்தாயின் பிள்ளைகள் அனைவருக்கும் சமமான கவனிப்பு வழங்குதல் சம்பந்தமாக நான் மகிழ்ச்சி யடைகின்றேன்.

சிறுவர்களின் எதிர்காலத்தைப் பாதுகாக்கும் பொருட்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அளப்பரிய சேவையாற்றி வருகின்றமை நான் அறிந்த உண்மையாகும். பாதுகாப்பான சிறவர் தலைமுறையினரை நாட்டுக்கு கொடையாக வழங்கும் பாரிய பொறுப்பு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அது தீவிரமான ஒரு பொறுப்பாகும். இதன் பொருட்டு பாரிய பங்களிப்பினை அதிகாரசபை வழங்கி வருகின்றதென்பதை நான் இங்கு மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகிறேன். பாதுகாக்கப்பட்ட சிறுவர் தலைமுறையினரை தேசத்திற்கு கொடையாக வழங்கும் பொருட்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவரை உள்ளிட்ட பதவியணிக்கு ஆக்கமும் ஊக்கமும் கிட்டட்டுமென பிராத்திக்கிறேன்.

**எம். எவ். ஏ. எம். ஹிஸ்புல்லா (பா. உ)**
சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சர்,
சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சு
2011.11.11

## சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் செய்தி



நவீன சிக்கல் நிறைந்த சமூகத்தில் சிறுவர் பாதுகாப்பு சம்பந்த மான பரவலான உரையாடலொன்றின் அவசியம் உருவாகியுள்ளது. நிகழ்கால சமூகத்தில் குடும்பங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைப்பொறுப்பு பரவலான பரப்பெல்லைக்குள்ளே வியாபித் துள்ளது.

முற்கால இலங்கை சமூகத்தில் நிலவிய கூட்டுக்குடும்ப அலகில் பல அங்கத்தவர்கள் வசித்தமையால் பிள்ளையின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் நிகழ்கால சமூகத்தில் காணக்கிடைக்கின்ற மிகுந்த கடமைப்பளு கொண்ட நிலைமை காரணமாக பிள்ளையின் பாதுகாப்பு அபாயநேர்வுக்கு இலக்காகியுள்ளமையைக் காணலாம். இந்நிலைமை காரணமாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு பாரிய கடமைப்பொறுப்பினை ஈடேற்ற வேண்டிய நிலை தோன்றி யுள்ளது. இது தொடர்ச்சியான மேற்பார்வை, அர்ப்பணிப்பு மற்றும் பிள்ளைகள் மீது இயல்பாகவே தோன்றுகின்ற அன்பு மற்றும் கவனிப்பினை அடிப்படையாகக்கொண்டு இடம்பெற வேண்டியதொன்றாகும்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் நோக்கத்தை ஈடேற்றிக்கொள்ள உதவிய அமைச்சில் இதற்கு முன்னர் இருந்த செயலாளர்களையும் இத்தருணத்தில் நினைவு கூருகிறேன்.

தேசத்தின் உயிர்நாடியான பிள்ளைகளின் பாதுகாப்புக்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்ற தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவரை உள்ளிட்ட பதவியணியின் சேவையைப் பெரிதும் பாராட்டுவதோடு பிள்ளைகளின் பாதுகாப்புக்காக செயற்பட அவசியமான ஆக்கமும் ஊக்கமும் கிடைக்கட்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.

**சுமித்ரா ராகுபத்த**
செயலாளர்
சிறுவர் அபிவிருத்தி மகளிர் அலுவல்கள் அமைச்சு.

2011.11.12

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் நிகழ்கால தலைவரின் செய்தி



அனைத்துவிதமான துர்ப்பிரயோகங்களுமின்றி பாதுகாக்கப்பட்ட சிறுவர் தலைமுறையினரை நாட்டுக்கு கொடையாக வழங்கும் பாரிய பொறுப்பு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதிமேதகு சனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ அவர்கள் சிறுவர்களுக்கென தனித்துவமான இடமொன்றை உருவாக்கிக் கொடுக்கும் பொருட்டு தனிவேறான ஓர் அமைச்சினை நிறுவியமையும் மிகவும் பாராட்ட வேண்டிய காலத்துடன் சாலப் பொருந்தும் செயலாகும்.

'மிகச்சிறந்தவை பிள்ளைகளுக்கே' மற்றும் மஹிந்த சிந்தனையின் 'மலர்போன்ற பிள்ளைகள்' எனும் எண்ணக்கருக்களுக்கு அமைவாக தேசத்தின் பிள்ளைகளுக்காக சிறுவர் நேயமுள்ளதும் பாதுகாக்கப்பட்டதுமான சுற்றுச்சூழலை உருவாக்கிக் கொடுக்கும் பொருட்டு ஏற்கனவெ தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை பல்வேறு தீவிரமான கடமைப் பொறுப்புக்களை ஈடேற்றியுள்ளது.

சிறுவர் துர்ப்பிரயோகம் சம்பந்தமாக ஒட்டுமொத்தச் சமுதாயத்தையுமே விழிப்பூட்ட வேண்டும். இதன்பொருட்டு பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப் பட்டுள்ளன. சிறுவர் துர்ப்பிரயோகம் தொடர்பில் நிலவுகின்ற சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியது காலத்தின் தேவையாக அமைவதைப் போன்றே தேசத்தின் பிள்ளைகளின் பாதுகாப்புக்காக புதிய சட்டதிட்டங்களை உருவாக்க வேண்டியதன் அவசியப்பாடு தொடர்பிலும் எமது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பிள்ளைகளின் நாளைய தினத்தைப் பாதுகாப்பதில் எப்பொழுதும் எமக்கு உறுதுணையாக விளங்கும் சிறுவர் அபிவிருத்தி மகளிர் அலுவல்கள் அமைச்சு கௌரவ அமைச்சர் திஸ்ஸ கரல்லியத்த அவர்களையும் பிரதியமைச்சர் கௌரவ எம். எல். ஏ. எம் ஹிஸ்புல்லா அவர்களையும் இவ்வேளையில் நன்றியுணர்வுடன் நினைவு கூறுகிறேன். அத்துடன் அமைச்சு செயலாளர், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பணிப்பாளர் சபை மற்றும் உயர் சபையிடமிருந்து கிடைக்கும் ஒத்துழைப்பினையும் பாராட்டுகிறேன். சிறுவர் தொடர்பில் செலாற்றுகின்ற அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களும் எமக்கு நல்கிய பங்களிப்பு பாராட்டத்தக்கது. மேலும் சிறுவர் துர்ப்பிரயோகத்தை ஒழித்துக்கட்டும் பணியில் மக்களுக்கு விழிப்பூட்டுகையில் ஊடக நிறுவனம் எமக்கு அளித்த ஒத்துழைப்பினையும் இச்சந்தப்பத்தில் நினைவுகூறுகிறேன்.

வியத்தகு இலங்கையில் வசிக்கும் சிறுவர்கள் அனைவரையும் பாதுகாக்க வேண்டியது ஒட்டுமொத்தச் சமுகத்தினதும் பாரிய பொறுப்பாகும். இதன் பொருட்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையுடன் கைகோர்த்துச் செயற்படுமாறு அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறேன்.

**அனோமா திசாநாயக்க**
தலைவர்
தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை
2011.11.10

# தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பிரதித் தலைவரின் செய்தி



*ஒரு நாட்டின் எதிர்காலமானது நிகழ்காலத்தில் வாழும் சிறந்த ஆளுமை படைந்த பிள்ளைகளாலேயே தீர்மானிக்கப்படுகின்றது. இதன் பொருட்டு பாதுகாக்கப்பட்ட பிள்ளைகள் தலைமுறையினரை தேசத்திற்கு கொடையாக அளிக்கும் பாரிய பொறுப்பு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இப்பொறுப்பினை ஈடேற்றும் பொருட்டு அதிகாரசபை தீவிர அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருகின்றது.*

நிகழ்கால சமூகத்தில் வசிக்கும் பெரும்பாலான பிள்ளைகள் உடல், உள மற்றும் பாலியல் ரீதியாக துர்ப்பிரயோகம் செய்யப் படுவதை காணக்கூடிய தாக உள்ளது. இது பாரதூரமான சமூகப் பிரச்சினையாக மாறியுள்ளது. இந்நிலைமையைக் குறைப்பது மிகவும் கடினமான பணியாகும். இதன் பொருட்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை பெரும் பிரயத்தனம் செய்யவேண்டிய நிலையேற்பட்டுள்ளது. இது மிகவம் கடினமானதாக அமையினும் எமது அதிகாரசபை அளப்பரிய பணியாற்றி உள்ளதென்பதை நான் மிக்க மகிழ்ச்சியுடன் வெளிப்படுத்துகிறேன்.

சிறுவர் துர்ப்பிரயோகம் தொடர்பாக சமுதாயத்திற்கு விழிப்பூட்டுவதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கத்தக்கதாக அமுலாக்கப்பட்டுள்ளன. அத்துடன் 2005 இன் 16 ஆம் இலக்கமுடைய சுனாமி (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் கீழ் அதிகாரசபைக்கு அளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களையும் நாம் ஈடேற்றி வருகின்றோம். சுனாமியால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் நலனோம்பலுக்கான சிறப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் பிள்ளைகள் அனைவருக்கும் துர்ப்பிரயோகமற்ற பாதுகாக்கப்பட்ட சமூகத்தை உரித்தாக்கிக் கொடுப்பதற்காக எம்முடன் இணையுமாறு அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறேன்.

**நந்தா இந்திரவங்ச**
பிரதித் தலைவர்
தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை
2011.11.16

**பொருடளக்கம்**


| | | பக்கம் |
|---|---|---|
| தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை பற்றிய அறிமுகம் | - | 1 |
| 2007 ஆம் ஆண்டின் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பணிப்பாளர் சபை | - | 2 - 3 |
| 2009 ஆம் ஆண்டின் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பணிப்பாளர் சபை | - | 4 - 5 |
| 2009 ஆம் ஆண்டின் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் முகாமைத்துவம் மற்றும் கணக்காய்வுக்குழு | - | 6 |
| 1998 இன் 50 ஆம் இலக்கமுடைய தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைச் சட்டத்தின் 14வது பிரிவில் வெளிப்படுத்தப்பட்ட அதிகாரசபையின் கடமைப்பொறுப்புக்கள் | - | 8 - 11 |
| 2009 ஆம் ஆண்டில் அதிகாரசபையின் அமைப்பாண்மைக் கட்டமைப்பு | - | 12 - 13 |
| ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட தேசிய மட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் | - | 14 - 19 |
| சட்ட அமுலாக்கல் பிரிவு | - | 20 - 25 |
| விசேட பொலிஸ் புலனாய்வுக் கூறு | - | 26 - 27 |
| நிகழ்ச்சித்திட்டப் பிரிவு | - | 28 - 32 |
| உளச் சமூகப் பிரிவு | - | 33 - 37 |
| சட்டப் பிரிவு | - | 38 - 40 |
| திட்டமிடல் / தகவல் மற்றும் ஊடகப் பிரிவு | - | 41 - 43 |
| நிர்வாகப் பிரிவு | - | 44 - 46 |
| நிதிப்பிரிவு | - | 47 - 48 |
| வருடாந்தக் கணக்குகள் | - | 49 - 66 |
| கணக்காய்வு அறிக்கைகள் | - | 67 - 77 |
| பின்னிணைப்புகள் | - | 78 - 81 |

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை பற்றிய அறிமுகம்

இலங்கையும் சிறுவர் உரிமைகள் பற்றிய ஐக்கிய நாடுகள் சாசனத்தை 1991 ஆம் ஆண்டில் ஏற்று அங்கீகரித்து கைச்சாத்திட்டது. அதன் பின்னர் இலங்கையில் சிறுவர் சாசனமொன்று தயாரிக்கப்பட்டதோடு சிறுவர் உரிமைகள் சாசனத்துடன் தொடர்புடைய தேசிய நெறிப்படுத்தல் குழுவொன்றும் தாபிக்கப்பட்டது.

சிறுவர் பாதுகாப்பு பற்றிய சனாதிபதி செயலணி 1996 டிசெம்பர் மாதத்தில் தாபிக்கப் பட்டதோடு சிறுவர் துர்ப்பிரயோகத்தை ஒழித்துக் கட்டுவதற்கான அரச நிறுவனமொன்றின் அவசியப்பாடு நிலவுவதாக அக்குழுவின் அறிக்கையில் அவதானிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க சிறுவர் துர்ப்பிரயோகம் மற்றும் சிறுவர்கள் கவனியாமல் விடப்படுதலை ஒழித்துக் கட்டுவதற்காக 1999 ஆம் ஆண்டின் சனவரி மாதம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை (NCPA) தாபிக்கப்பட்டது. 1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை 1999 ஆம் ஆண்டில் இருந்து சனாதிபதி செயலகத்தின் மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் தனது நிர்வாகப் பணிகளை மேற்கொண்டு வந்ததோடு 2006 ஆம் அண்டில் இருந்து சிறுவர் அபிவிருத்தி, மகளிர் மேம்பாட்டு அமைச்சின் கீழ் இயங்கி வருகின்றது.

இலங்கையில் 2004 டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி தோன்றிய சுனாமி பேரழிவின் பின்னர் அந்த அனர்த்தத்திற்கு இலக்காகிய சிறுவர்களின் மேம்பாட்டுக்காக 2005 இன் 16 ஆம் இலக்கமுடைய சுனாமி (சிறப்பேற்பாடுகள்) சட்டம் அங்கீகரிக்கப்பட்டது. அச்சட்டம் மூலமாக அதிகார சபையிடம் புதிய தத்துவங்களும் பணிகளும் கையளிக்கப்பட்டன. அதன் மூலமாக பெற்றோர் இருவரையும் அல்லது தாய் அல்லது தந்தை அல்லது பாதுகாவலரை இழந்த சிறுவரது பொறுப்பான்மை தொடர்பில் செயலாற்றுதலும் அதிகாரசபையின் கடமைப் பொறுப்புக்களுடன் சேர்க்கப்பட்டது.

2005 இன் 34 ஆம் இலக்கமுடைய வீட்டு வன்முறைகளைத் தடுப்பதற்கான சட்டம் மூலமாகவும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் ˙விடயப்பரப்பு விரிவடைந்துள்ளது. சிறுவரொருவர் வீட்டு வன்முறைக்கு இலக்காகியமை பற்றி அதிகாரசபைக்கு அறிவிக்கப்பட்டவிடத்து மூன்றாந் தரப்பினர் எனும் வகையில் அதில் இடையீடு செய்ய இச்சட்டம் மூலமாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு தத்துவம் கையளிக்கப் பட்டுட்டுள்ளது.

## 2009 ஆம் ஆண்டில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பணிப்பாளர் சபை



திரு. ஜகத் வெல்லவத்த

தலைவர்
தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை
சிரேட்ட விரிவுரையாளர்,
சமூகவியல்பிரிவு,
கொழும்பு பல்கலைக்கழகம்



திருமதி நந்தா இந்திரவங்ச

பிரதித் தலைவர்
தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை
முன்னாள் கல்விப் பணிப்பாளர்



டாக்டர் திரு. நீல் பர்னாந்து

அங்கத்தவர்
உளவியல் மருத்துவ நிபுணர்,
ஆலோசகர், தேசிய உளச்சுகாதார
கல்வி நிறுவகம்,
அங்கொடை



டாக்டர் திருமதி சாந்திமாலா த சில்வா

அங்கத்தவர்,
சிறுவர் நோயியல் நிபுணர்,
றிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலை



டாக்டர் திரு. ஆனந்த சமரசேகர

அங்கத்தவர்
பிரதம சட்ட மருத்துவ உத்தியோகத்தர்
நச்சியல் மற்றும் சட்டமருத்துவ நிறுவகம்



கலாநிதி திரு. புத்திபிரபா பத்திரண

அங்கத்தவர்
சிரேட்ட உளவியல் விரிவுரையாளர்,
தத்துவம் மற்றும் உளவியல் கற்கைப்
பிரிவு, பேராதனைப் பல்கலைக்கழகம்



சட்டத்தரணி திரு. பாலித பர்னாந்து

அங்கத்தவர்,

பிரதி மன்றாடியார் நாயகம்

சட்டமா அதிபர் திணைக்களம்



திரு. என். கே. இலங்ககோன்

அங்கத்தவர்
சிரேட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்,
பொலிஸ் தலைமையகம்
கொழும்பு.



டாக்டர் திரு. அசோக ஜயசேகர

அங்கத்தவர்,
நிபுணத்துவ மருத்துவர்
(தொண்டை, காது, மூக்கு)
ஜயவர்தனபுர வைத்தியசாலை



திரு. டபிள்யூ. ஆர். வீ. ஜீ. சமரசிறி

அங்கத்தவர்
பணிப்பாளர்,
தேசிய வரவு - செலவு,
நிதி, திட்டமிடல் அமைச்சு



திரு. கே. ஏ. டி. சந்திரசேன

அங்கத்தவர்



திரு. டி. எம். எஸ். அபயகுணவர்தன

உத்தியோகபூர்வ அங்கத்தவர்,
ஆணையாளர்,
நன்னடத்தை, சிறுவர் பாதுகாவல்
சேவைகள் திணைக்களம்.



திரு. டபிள்யூ. ஜே. எல். யூ. விஜேவீர

உத்தியோகபூர்வ அங்கத்தவர்,
தொழில் ஆணையாளர் நாயகம்,
தொழில் திணைக்களம்.

## 2009 ஆம் ஆண்டில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் உயர்சபை



திருமதி கமலினீ த சில்வா

அங்கத்தவர்
மேலதிக செயலாளர்,
நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சு



திருமதி சந்தியா விஜேபண்டார

அங்கத்தவர்,
மேலதிக செயலாளர்,
கல்வி அமைச்சு



திருமதி ஆர். எம். ஐ. ரத்நாயக்க

அங்கத்தவர்
சிரேட்ட உதவிச் செயலாளர்
பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய



திரு.சரத்.சந்திரசிறி வித்தான

அங்கத்தவர்
சிரேட்ட உதவிச் செயலாளர்
சுகாதார,போசாக்கு அமைச்சு



திருமதி யமுனா சித்திராங்கனீ

அங்கத்தவர்,
மேலதிக செயலாளர்,
சமூக சேவைகள், சமூக நலனோம்புகை அமைச்சு



திருமதி தயா பீரிஸ்

அங்கத்தவர்,
மேலதிக செயலாளர்,
சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அபிவிருத்தி அமைச்சு



திரு. டபிள்யூ. டி. என். வெலிவத்த

அங்கத்தவர்
பதில் தொழில் ஆணையாளர்
மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள்
பிரிவு, தொழில் திணைக்களம்



திருமதி ஹேவா தர்மவர்தன

அங்கத்தவர்,
மேலதிக செயலாளர்,
சுற்றுலாத்துறை அமைச்சு



திரு. பிரியந்த மாயாதுன்ன

அங்கத்தவர்,
மேலதிக செயலாளர்,
தகவல், மக்கள் தொடர்பாடல் அமைச்சு

## 2009 ஆம் ஆண்டில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுக்குழு



திரு. டபிள்யூ. ஆர். வீ. ஜீ. ஜீ.

தலைவர்
பணிப்பாளர்
தேசிய வரவு, செலவுத்திணைக்களம்
நிதி, திட்டமிடல் அமைச்சு



திரு. டி. எம். எஸ். அபயகுணவர்தன

அங்கத்தவர்,
ஆணையாளர்,
நன்னடத்தை, சிறுவர் பாதுகாவல் சேவைகள் திணைக்களம்.



திரு. ஜே. ஏ. டி. சந்திரசேன

அங்கத்தவர்



திருமதி பீ. ஏ. எம். குமுதினி

அங்கத்தவர்
கணக்காய்வு அத்தியட்சகர்
கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களம்



திருமதி தேசிகா மல்காந்தி

அமைப்பாளர்,
கணக்காளர்
தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

# நோக்கு

சிறுவர்களுக்கான சிறுவர் நேயமுள்ளதும் பாதுகாப்பு மிக்கதுமான சுற்றுச்சூழலைக் கட்டியெழுப்புகின்ற முதன்மை நிறுவனமாக மாறுதல்.

# அரும்பணி

சிறுவர்கள் அனைத்துவிதமான துஷ்ப்பிரயோகங்களிலிருந்தும் விடுதலை பெற்றவர்கள் என்பதை உறுதிசெய்தல்

**1998 இன் 50 ஆம் இலக்கமுடைய தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைச் சட்டத்தின் 14 வது பிரிவில் வெளிப்படுத்தப்பட்ட பணிகள்**

- சிறுவர்களை துஷ்ப்பிரயோகம் செய்யப்படுவதைத் தடுத்தல், அத்தகைய துஷ்ப்பிரயோகத்திற்குப் பலியானவர்களான சிறுவர்களுக்குப் பாதுகாப்பும் சிகிச்சையும் அளித்தல் என்பன பற்றிய தேசியக் கொள்கையொன்றை வகுத்தமைப்பதில் அரசாங்கத்திற்கு மதியுரை வழங்குதல்

- சிறுவர் துஷ்ப்பிரயோகத்தைத் தடைசெய்வதற்கான வழிமுறைகள் பற்றி அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்குதல்

- அத்தகைய துஷ்ப்பிரயோகத்துக்குப் பலியானவர்களின் பாதுகாப்புக்கான வழிவகைகள் பற்றி அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்குதல்

- சிறுவர்கள் துஷ்ப்பிரயோகத்திலிருந்து பாதுகாக்கப்படுவதற்கு அவர்களுக்குள்ள உரிமை, சிறுவர்களைத் துர்ப்பிரயோகஞ் செய்வதைத் தடுப்பதற்கான வழிமுறைகள் என்பன பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தல்

- சிறுவர் துஷ்ப்பிரயோகத்தைத் தடைசெய்யும் நோக்கத்துக்காகவும், அத்தகைய துஷ்ப்பிரயோகத்துக்குப் பலியானவர்களைப் பாதுகாத்து அவர்களின் நலன்களுக்குக் காப்பளிப்பதற்காகவும் இயைபான அமைச்சுகள், மாகாணசபைகள், உள்;ரதிகார சபைகள், மாவட்ட, பிரதேச செயலாளர்கள், பகிரங்க மற்றும் தனியார்துறை ஒழுங்கமைப்புகள் என்பவற்றுடன் ஆலோசனை நடாத்துதல், அத்துடன் அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எல்லா வழிகளையும் சிபார்சுசெய்தல்

- சிறுவர் துஷ்ப்பிரயோகத்தைத் தடைசெய்வதற்கான தேசிய கொள்கையைப் பயனுள்ள வகையில் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான சட்ட, நிருவாக அல்லது வேறு சீர்த்திருத்தங்களை விதந்துரைத்தல்

- எல்லாவிதமான சிறுவர் துஷ்ப்பிரயோகம் தொடர்பான சட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படுதவதைக் கண்காணித்தல்

- சிறுவர்கள் துஷ்ப்பிரயோகம் தொடர்பான எல்லாப் புலனாய்வுகள் மற்றும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைககள் ஆகியவற்றின் முன்னேற்றத்தைக் கண்காணித்தல்.

- ஆயுதப் போராட்டத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர் தொடர்பில் மனிதாபிமான நடவடிக்கைகள் எடுப்பதற்கும், அத்தகைய பிள்ளைகளின் உள மற்றும் உடல்

ரீதியான நலன் உட்பட அவர்களின் பாதுகாப்பு மற்றும் அவர்கள் மீண்டும் சமுதாய நீரோட்டத்தில் ஒன்றிணைதல் ஆகியவற்றுக்கான நடவடிக்கைகளை விதந்துரைத்தல்

- குற்றவியல் புலனாய்வுகள் மற்றும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் ஆகியவற்றில் சம்பந்தப்பட்ட சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கு அவசியமானவிடத்து, தோதான நடவடிக்கைகளை எடுத்தல்.

- சிறுவர் துஷ்ப்பிரயோகம் தொடர்பாக பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்ளுதலும் அத்துடன் அவசியமானவிடத்து, அத்தகைய முறைப் பாடுகளைத் தோதான அதிகாரிகளுக்கு ஆற்றுப்படுத்துதலும்

- சிறுவர் துஷ்ப்பிரயோகத்துக்கு எதிரான பிரசாரங்களை ஒருங்கிணைப்பதற்கு மாகாணசபை மற்றும் உள்ளூர் அதிகாரசபைகள் மற்றும் அவர சார்பற்ற ஒழுங்கமைப்புகள் என்பவற்றுக்கு ஆலோசனை வழங்குதலும் உதவிசெய்தலும்

- சிறுவர் துஷ்ப்பிரயோகம் பற்றி ஒரு தேசிய தரவுகள் அட்டவணையைத் தயாரித்தலும் பேணுதலும்

- சிறுவர்களுக்கு பிள்ளைப் பராமரிப்புச் சேவைகள் வழங்குகின்ற எல்லாச் சமய மற்றும் தரும நிறுவனங்களை இயைபான அமைச்சுக்களினதும் ஏனைய அதிகாரிகளினதும் ஆலோசனையுடன் மேற்பார்வை செய்தலும், கண்காணித்தலும்

- சிறுவர் துஷ்ப்பிரயோகம் மற்றும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பிலான ஆராய்ச்சியை நடாத்துதலும் ஊக்குவித்தலும் ஒன்றிணைத்தலும்

- பிள்ளைகளின் பாதுகாப்பு மற்றும் பிள்ளைகளின் நலன்களைப் பாதுகாத்தல் சம்பந்தமாகப் பொதுமக்களுக்குத் தகவலும் கல்வியும் வழங்குதலும்

- சிறுவர் துஷ்ப்பிரயோகத்துக்கான சந்தர்ப்பங்களைக் குறைக்கும் கருத்துடன் சுற்றுலாப் பயணத்துறையோடு தொடர்புபட்ட எல்லாப் பிரிவினருடனும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுதல்

- சிறுவர் துஷ்ப்பிரயோகம் தொடர்பில் பயிற்சிப்பட்டறைகள், கருத்தரங்குகள் மற்றும் கலந்துரையாடல்கள் ஆகியவற்றை ஒழுங்கமைத்து அவற்றிற்கு வசதியளித்தல்

- எல்லாவிதமான சிறுவர் துஷ்ப்பிரயோகங்களையும் கண்டுபிடித்தல் அத்துடன் தடைசெய்தல் என்பன தொடர்பில் வெளிநாட்டு அரசாங்கங்கள் மற்றும் சர்வதேச ஒழுங்கமைப்புகள் ஆகியவற்றுடன் தொடர்புகொண்டு தகவல் பரிமாற்றம் செய்தல்.

**மேலே காட்டப்பட்ட அதிகாரசபையின் பணிகளை பிரதானமான**

**ஏழு பிரிவுகளின் கீழ் காட்டலாம்**

- சிறுவர் உரிமைகள், சிறுவர்களை துஷ்ப்பிரயோகங்களிலிருந்து தடுக்கும் விதம் பற்றி மக்களுக்கு விழிப்பூட்டுதல்
- துஷ்ப்பிரயோகங்களுக்கு இலக்கானவர்களைப் பாதுகாத்தலும், புனர்வாழ்வளித்தலும்
- சிறுவர் துஷ்ப்பிரயோகங்களைத் தடுப்பதற்கு அவசியமான இணைப்பாக்கம்
- சம்பந்தப்பட்ட தொழில்வாண்மையாளர்களுக்குப் பயிற்சி அளித்தல்
- சட்டத்திருத்தங்களை விதந்துரைத்தலும் சட்டத்தை அமுலாக்குதலும்
- சிறுவர் துஷ்ப்பிரயோகத்தை தடுத்தல் பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்
- மேற்படி நடவடிக்கைகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி



தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டம் மூலமாக கையளிக்கப்பட்டுள்ள கடமைப் பொறுப்புக்களை ஈடேற்றுவதற்காக தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையின் மேற்பார்வை யின் பேரில் சில பிராதன பிரிவுகளின் கீழ் அதிகாரசபை அமுலாகி வருகின்றது.

அத்தகைய பிரிவுகளாவன,

1. சட்ட அமுலாக்கல் பிரிவு
   - மத்திய பதிவேட்டகம்
2. நிகழ்ச்சித்திட்டப் பிரிவு
3. உளச் சமூகப் பிரிவு
4. சட்டப் பிரிவு
5. விடேச பொலிஸ் புலனாய்வுக்கூறு
6. திட்டமிடல் / தகவல் மற்றும் ஊடகப் பிரிவு
   - நூலகம்
7. நிர்வாகப் பிரிவு

## 2009 ஆம் ஆண்டின் தேசிய சிறுவர் பாதுகாப்பு அலுவல்கள் சபையின் அமைப்பாண்மைக் கட்டமைப்பு



**தலைவரை உள்ளிட்ட பணிப்பாளர் சபை**

1998 இன் 50 ஆம் இலக்கமுடைய தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்திற் கிணங்க இருக்க வேண்டிய பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் எண்ணிக்கை 13 ஆக அமைய வேண்டுமென்பதோடு உயர். சபை அங்கத்தவர்களின் எண்ணிக்கை 10 ஆகும்.

2009 ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் 09 தடவைகள் நடத்தப்பட்டுள்ளதோடு அதில் 56 பணிப்பாளர் சபைப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டு கலந்துரையாடப்பட்டன. பிரதித் தலைவர் திருமதி. நந்தா இந்திரவங்ச வெளிநாடு சென்றமையால் பெப்ருவரி மாதம் 01 ஆம் திகதியில் இருந்து ஏப்பிறல் மாதம் 22 ஆம் திகதி வரை பணிப்பாளர் சபை அங்கத்தவர் திரு. ஜே. ஏ. டி. சந்திரசேன பிரதித் தலைவராக பதிற்கடமை ஆற்றினார். பணிப்பாளர் சபை அங்கத்தவர் சட்டத்தரணி திரு. பாலித பர்னாந்து 2009 செப்ரெம்பர் மாதத்தில் பதவி விலகியதோடு சட்டத்தரணி திரு. ஜயந்த ஜயசூரிய வெற்றிடம் தோன்றிய அங்கத்தவர் பதவிக்காக ஒக்டோபர் மாதத்தில் இருந்து நியமிக்கப்பட்டார்.

**முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுக்குழு**

நிதிப்பிரிவின் ஊாடாக 2009ம் ஆண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வுக் குழுவினால் நடைபெற்ற கடந்த 6 கூட்டங்களில் எடுக்கப்பட்ட கணக்கு பரிசோதனை கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட 2009 ஆண்டிற்குரிய பாதீடு மற்றும் நிதி நிலைமையும், அளவீடுகளும் அதிகாரசபை எடுத்துக்கொண்டது. 2008 ம் ஆண்டு கணக்கறிக்கைகளின்படி 2008 ம் ஆண்டு நிதி நிலை கணக்கியல் நிலையும் கலந்துரையாடப்பட்டது.

**ஆண்டில் அமுலாக்கப்பட்ட தேசிய மட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்**

நிகழ்கால சமூகத்தில் சிறுவர் பாதுகாப்பற்ற நிலையுறுதலை பரவலாக பேணக்கூடியதாக உள்ளது. சமூகத்தில் போட்டி நிலைமை அதிகரிக்கின்ற வேளையில் சிறுவர் குடும்பத்தில், பாடசாலையில் மற்றும் சமூகத்தில் தனிமைப்படுத்தப்படுதல் காரணமாக சிறுவர் துஷ்ப்பிரயோகங்களுக்கு இலக்காவதற்கான அதிக வாய்ப்புகள் உருவாகின்றன.

சிறுவரொருவர் துர்ப்பிரயோகத்திற்கு ஆளாக முன்னராக அதனைத் தடுத்துக்கொள்ளல் மீது சமூகத்தின் கவனம் செலுத்தப்படுதல் இடம்பெற வேண்டிய விடயமொன்றாகும். ஏனெனில் துஷ்ப்பிரயோகத்திற்கு ஆளாகும் பிள்ளையைப் போன்றே துஷ்ப்பிரயோகம் செய்பவரும் சமூகத்தில் வசிக்கும் ஆட்களாக விளங்குவதாகும். எனவே சமூகத்தில் வசிக்கும் ஏனைய ஆட்கள் அனைவருக்கும் ஒரு பொறுப்பு உண்டு. அதாவது சிறுவர் துஷ்ப்பிரயோகத்தை சமூகத்தில் இருந்து ஒழித்துக்கட்டுவதற்காக சிறுவர் பாதுகாப்பு பற்றிய அறிவினால் கட்டிவளர்க்கப்பட்ட சிறுவர் பாதுகாவலன் எனும் வகையில் சமூகத்திற்கு சேவையாற்றுவ தாகும்.

**1. சிறுவர் துன்புறுத்தலுக்கு எதிரான தேசியதினம்**

சிறுவர் துஷ்ப்பிரயோகத்தை தடுப்பதற்காக சமுதாயத்திற்கு விழிப்பூட்டுதல் சிறுவர் பாதுகாப்பின் மிக முக்கியமானதோர் உபாயமுறையாகும். இதன் பொருட்டு பயன்படுத்தப் படுகின்ற ஒரு வழிமுறையாக அமைவது சிறுவர்களுடன் தொடர்புடைய கொண்டாட்டத் தினங்களை தேசிய மட்டத்தில் கொண்டாடுவதாகும். அதிகாரசபையின் பணிப்பாளர் சபையினால் 2008 ஆம் ஆண்டில் சிறுவர் துன்புறுத்தலை ஒழித்துக்கட்டுவதற்கான தேசிய தினத்தை பிரகடனஞ் செய்வதற்காக மேற்கொண்ட தீர்மானத்தை இவ்வாண்டில் அதிகாரசபையினால் அமுலாக்க இயலுமாயிற்று.

2008 டிசெம்பர் 26 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகை இலக்கம் 1581/27 மூலமாக சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் மேம்பாட்டு அமைச்சர் கௌரவ சுமேதா ஜீ. ஜயசேன அவர்களால் ஒவ்வோராண்டிலும் சனவரி 04 ஆந் திகதி சிறுவர் துன்புறுத்தலுக்கு எதிரான தேசிய தினமாக பிரகடனஞ் செய்யப்பட்டுள்ளது.

சிறுவர்களை உடல்ரீதியாக தண்டித்தல் மற்றும் சிறுவர்களை கொடூரம் செய்தலுக்கு எதிராக செயலாற்றுதல் மாத்திரமன்றி இலங்கை சிறுவர் தலைமுறையினரது உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் சிறுவர் நேயமுள்ள சுற்றுச்சூழலைக் கட்டியெழுப்புவதே நோக்கமாகக் கொண்டு இப்பணி மேற்கொள்ளப்பட்டது.

2009 ஆம் ஆண்டில் சிறுவர் துன்புறுத்தலுக்கு எதிரான தேசிய தினத்தைக் கொண்டாடும் பொருட்டு 2009.01.14 ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் சிறுவர் அபிவிருத்தி, மகளிர் மேம்பாட்டு அமைச்சர் கௌரவ சுமேதா ஜீ. ஜயசேன அவர்களின் தலைமையில் தேசிய வைபவமொன்று நடத்தப்பட்டது. இங்கு சிறுவர்களுக்காக ஈடிணையற்ற சேவையாற்றிய ஆட்களைப் பாராட்டுவதற்காக 'லமா சுரெக்கும் இருத்யாபிமானி' விருது வழக்கப்பட்டடு கௌரவிக்கப்பட்டனர்.

இலங்கையில் சிறுவர் பாதுகாப்பினை நிறுவும் பொருட்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் முதலாவது தலைவராகவும் சிறுவர் நோயியல் மருத்துவ நிபுணராகவும் ஆற்றிய சேவையைப் பாராட்டி பேராசிரியர் ஹரேந்திர த சில்வா, சிறுவர் பாதுகாப்பு பற்றிய விசேட அறிவு படைத்த சிறுவர்களின் பாதுகாப்புக்காக நிறுவப்பட்ட சனாதிபதி செயலணியின்

முதலாவது அங்கத்தவராக விளங்கிய டாக்டர் திருமதி ஹிரந்தி விஜேமான், சிறுவர் துர்ப்பிரயோகம் சம்பந்தமாக நீதிமன்ற செயற்பாட்டின் போது முன்னோடி அரும்பணி ஆற்றிய திருமதி சிராணி திலக்கவர்தன, சிறுவர்களின் அழகியலுக்கு மெருகூட்டி அவர்களின் உளப் பண்பாட்டினை விருத்தி செய்வதற்காக ஓவியம் மற்றும் கதைகளை சிறுவர்களுக்கு ஏற்றவகையில் இலங்கை மண்வாசைன கொண்டதாக நெறிப்படுத்தியமைக்காக திருமதி சிபில் வெத்தசிங்க, இலங்கையில் சிறுவர்களுக்கான சட்டமுறைமையைப் பலப்படுத்துவதில் முன்னோடியாக அரும்பணி ஆற்றிய பேராசிரியர் திருமதி சாவித்திரி, சிறுவர்களின் பாதுகாப்புக்காக சிறுவர் நேயமுள்ள சுற்றுச்சூழலைக் கொண்ட சேவைகளை வழங்கியமை மற்றும் தாயைப்போல் பாதிப்புள்ளான சிறுவர்களைப் பாதுகாத்தமைக்காக திருமதி நீதா ஆரியரத்ன, புதிய தொழில்நுட்பத்தினூடாக தோன்றுகின்ற உருவப்படக் குறிப்புக்களை சிறார்களுக்கு மிகவும் நெருக்கமான அனுபவம் என்ற வகையில் மொழியைக் கையாண்டு அழகியல்சார் பயிற்சியை சிறுவர் மத்தியில் ஏற்படுத்த கார்ட்டுன் ஊடகத்தை இலங்கை அடையாளத்துடன் பாவித்தமைக்காக திரு. அத்துல ரன்சிறிலால் மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் விசேட பொலிஸ் புலனாய்வுக்கூறின் நிலையைப் பொறுப்பதிகாரியாக சிறுவர் பாதுகாப்பு சம்பந்தமான சட்டத்தை அமுலாக்கையில் தரம் மற்றும் பெறுமதி கொண்ட நடைமுறைகளை அமுலாக்கியமைக்காக திரு. டபிள்யூ. டி. ரி. கே. விஜேசேன விதான ஆகியோர் ‘குருத்யாபிமானி’ விருது வழங்கப்பட்டனர்.

அத்துடன் சிறுவர் பாதுகாப்புக்காக முன்னோடி ஊடக அரும்பணி ஆற்றிய கீழே பெயர் குறிப்பிடப்பட்ட ஊடவியலாளர்களும் பாராட்டப்பட்டார்கள். சிரச ரீ. வி அலைவரிசைக்காக திரு. துசித பிட்டிகல, திரு. கலிந்த சத்துரங்க, ஸ்ரீ. எவ். எம். வானோலி அலைவரிசைக்காகவும், திரு. ரவீந்திர கன்னங்கர சிரச எவ். எம். வானொலி அலைவரிசைக் காகவும், திருமதி வினீதா எம். கமகே லங்காதீப செய்தித்தாள் சார்பிலும் செல்வி ஹேமந்தி குருகே டேலிமிரர் செய்தித்தாள் சார்பிலும், தினமின செய்தித்தாள் சார்பில் திருமதி புத்திகா, இம்புலானவும், செல்வி நதீரா குணதிலக டேலி நியுஸ் செய்தித்தாள் சார்பாகவும், திருமதி பிரியந்தி லாலனி ரூபவாஹினி அலைவரிசை சார்பாகவும், செல்வி தினுஸா ராஜபத்திரண சுவர்ணவாஹினீ அலைவரிசை சார்பாகவம், திருமதி நிஸாந்தி காரியப்பெரும இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சுதேச சேவை சார்பாகவும், திரு. லக்ஸ்மன் மத்துமகல சுயாதீன தொலைக்காட்சி சேவை சார்பாகவும், செல்வி காயத்ரீ பின்த்து லக்பிம செய்தித்தாள் சார்பிலும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

அதிகாரசபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ்வைபவத்திற்காக 1.3 மில்லியன் ரூபா செலவினை ஏற்க நேரிட்டது.

## 2. யுத்த நிலைமை காரணமாக இடம்பெயர்ந்த மக்களின் சிறுவர்களுக்கான உதவிகளை சேகரிக்கும் நிகழ்ச்சித்திட்டம்

யுத்த நிலைமை காரணமாக வடக்கில் இடம்பெயர்ந்த மக்களின் பிள்ளைகளுக்கு நிவாரணங்களை வழங்குவதற்காக பண்டங்களையும் நிதியுதவிகளையும் சேகரிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்று ‘தேதுனு பாலம’ எனும் பெயரில் இவ்வாண்டின் தொடக்கத்தில் அதிகாரசபையினால் அமுலாக்கப்பட்டது.

இதன்கீழ் 2009.06.01 ஆம் திகதி உண்டியல் இயக்கமொன்று கொழும்பு கோட்டையைச் சார்ந்ததாக நடத்தப்பட்டது. இதற்காக புறக்கோட்டை பன்சலவின் அத்தரகம தேரர் (புறக்கோட்டை பொடி ஹாமதுருவோ), பஸ்தியன் மாவத்தை வர்த்தக சங்கம், பஸ்தியன் மாவத்த முச்சக்கர வண்டிச் சங்கம், மெனிங் மார்க்கட் வர்த்தக சங்கம், கோட்டை பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை மற்றும் புறக்கோட்டை பொலிஸாரின் ஒத்துழைப்பு கிடைத்தது. இதற்கான ஊடக உள்ளடக்கமும் பிரச்சாரமும் மெக்ஸ் ரெலிவிஸன் நிறுவனத்தினால்

வழங்கப்பட்டது. இந்த உண்டியல் இயக்கம் மூலமாக ரூ. 128,256.50 பணத்தொகையை நிதியுதவியாக பெற்றுக்கொள்ள இயலுமாயிற்று.

இதன் அடுத்த நிகழ்ச்சி 2009.06.18 ஆம் திகதி நுகேகொட நகரத்தில் நடத்தப்பட்டது. இதன்பொருட்டு தெஹிவல - கல்கிஸ்ஸ நகரசபை, நுகேகொட ஆடை வர்த்தக சங்கம் மற்றும் மிரிஹான பொலீஸாரின் ஒத்துழைப்பு கிடைத்தது. ரூ. 100,387.00 பணத்தொகையை நிதியுதவியாக பெற்றுக்கொள்ள இயலுமாயிற்று. இப்பணிக்காக கொடை வள்ளல் களிடமிருந்து கிடைத்த உதவிகள் பின்வருமாறு.

| **நிதியுதவி வழங்கிய நிறுவனம்** | **வழங்கிய உதவிகள்** |
|---|---|
| கால்நடை வளச்சபை பதவியணி | மருந்து வகைகள் |
| துறைமுகங்கள் அதிகாரசபைத் தலைவரது இணைப்பாக்கத்துடன் பப்புவா நியுகினியா O.B.E அமைப்பு | மருந்து வகைகள் |
| அனைத்துலக மகளிர் அமைப்பு | உலர் உணவு, பால்மா, மருந்துவகைகள் |
| ஊவா - வெல்லஸ்ல பல்கலைக்கழக பதவியணி | உலர் உணவு, பாலகர்களுக்கான தயாரிப்புகள் |
| கொழும்பு தெற்கு பாடசாலை | தண்ணீர் போத்தல்கள், உலர் உணவு |
| மயின்ட் சொலுசன் அரச சார்பற்ற அமைப்பு | பாலகர் தயாரிப்புகள் |

2009.07.23 ஆம் திகதி அதிகாரசபையின் பிரதித் தலைவரின் தலைமையிலான உத்தி யோகத்தர் அணியொன்று புல்மோட்டை பிரதேசத்தில் அமைந்துள்ள 02 இடம்பெயர் முகாம்களின் சிறுவர்களுக்கு பண்ட உதவிகளை விநியோகின்றது.

சேகரிக்கப்பட்ட மருந்து வகைகள் வவுனியாவில் அமைந்துள்ள நிவாரணக் கிராமங்களின் வலய இலக்கம் 02 இல் அதிகாரசபையினால் இணைப்பாக்கம் செய்யப்பட்ட சிறுவர் மருத்துவ கிளினிக்குகளின் பாவனைக்காக எடுக்கப்பட்டது.

### 3. வடக்கின் வசந்தம் நிகழ்ச்சித்திட்டம்

இத்தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்திற்காக ஆரம்ப நிதியேற்பாடுகள் பொதுதிறைசேரியினால் ஒதுக்கப்பட்டிராமையால் அதிகாரசபையினால் வவுனியா நிவாரணக் கிராமங்களைச் சேர்ந்த சிறுவர்களுக்கு அவசியமான சேவை வழங்கல் யுனிசெப் ஏற்பாடுகள் மூலமாக மேற்கொள்ளப்பட்டது.

| **நிகழ்ச்சித்திட்டம்** | **பௌதீக** | **நிதி (ரூ.மில்)** | **நலன் பெறுநர்கள்** |
|---|---|---|---|
| சிறுவர், பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்களுக்கான விழிப்பூட்டல் நிகழ்ச்சி | 05 நிகழ்ச்சிகள் | 0.1 | 300 |

| | | | |
|---|---|---|---|
| வயது முதிர்வு காரணமான நோய் களைத் தடுப்பதற்கான சுகாதாரக் கல்வி நிகழ்ச்சி | 05 நிகழ்ச்சிகள் | 0.1 | 500 |
| மருத்துவ உதவிகளை வழங்குதல் | தினசரி சிறுவர் கிளினிக்குகள் 02 மாதங்கள் | 0.1 | 6200 சிறுவர்கள் |
| உளச் சமூகவசதிகளை வழங்குதல் | 10 நிகழ்ச்சிகள் | 0.2 | 1200 சிறுவர்கள் |
| சிறுவர்கள் பற்றிய தரவுகளைச் சேகரித்தல் | | 0.3 | 6500 சிறுவர்கள் |

*மூலம் : திட்டமிடல் / தகவல் மற்றும் ஊடகப்பிரிவு*

இந்த வசதிகள் அனைத்தும் வவுனியா இராமநாதன் கிராமத்தின் சிறுவர்களுக்கு 2009.06.01 ஆம் திகதியில் இருந்து 2009.07.15 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் அதிகார சபை உத்தியோகத்தர்கள் மற்றும் 06 மருத்துவ அணிகளின் பங்கேற்புடன் வழங்கப் பட்டது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் பேரில் அதிகாரசபையின் சுனாமி நிதியத்தின் கீழ் 2.0 மில்லியன் ரூபாவும் யுனிசெப் நிதியத்தின் கீழ் 0.7 மில்லியன் ரூபாவும் இந்நிகழ்ச்சிக்காக செலவிடப்பட்டது.

வடக்கின் வசந்தம் தொடர்பாக யுனிசெப் நிதியேற்பாடுகளின் கீழ் அமுலாக்கப்பட்ட ஏனைய பிரதான நிகழ்ச்சித்திட்டமாக அமைந்தது. சிறுவர் கேந்திரநிலையமொன்று வவுனியா மாவட்டச் செயலகத்தில் நிறுவப்பட்டமையாகும். 2009.11.12 ஆம் திகதி வவுனியா மாவட்டச் செயலாளர் திருமதி ஜீ. என். எம். சார்ள்ஸ் அவர்களின் தலைமையில் சிறுவர் அபிவிருத்தி, மகளிர் மேம்பாட்டு அமைச்சு செயலாளர் திரு. எம். சுமனதாசவின் பங்கேற்புடன் இப்புதிய நிலையம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சித்திட்டத்திற் காக 1.4 மில்லியன் ரூபா பணத்தொகை யுனிசெப் நிதியேற்பாடுகளின் கீழ் செலவிடப் பட்டது.

வவுனியா மாவட்ட உத்தியோகத்தர்களின் தலைமையில் செட்டிக்குளத்தில் அமைந்துள்ள நிவாரணக் கிராமங்களின் சிறுவர் பாதுகாப்பு சம்பந்தமான நிகழ்ச்சித்திட்டமொன்று அமுலாக்கப்பட்டது. நிவாரணக்கிராமம் இலக்கம் 0 (பூச்சியத்தில்) இல் உளச்சமூக செயற் பாடுகளுக்கான சிறுவர் நட்புமிக்க (child friendly space) கூறு ஒன்றும் 01 மற்றும் 03 ஆம் இலக்க வலயங்களில் 02 சிறுவர் கேந்திர (child focus) கூறுகளும் நடைமுறைப்படுத்தப் பட்டன.

வவுனியா நிவாரணக் கிராமம் இலக்கம் 01 இல் அருணாசலக் கிராமத்தில் Terre des Homes (TDH) எனப்படுகின்ற சுவீடன் அரச சார்பற்ற அமைப்பாண்மையுடன் ஒருங்கிணைந்து child friendly space நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இங்கு நிதி முகாமைத்துவம் TDH அமைப்பாண்மையிலும் எண்ணக்கரு முகாமைத்துவம் அதிகாரசபையினாலும் மேற்கொள்ளப்பட்டது. 10 child friendly space கூறுகள் நிவாரணக் கிராமங்களில் நிறுவப்பட்டு நெறிப்படுத்தல் பணிகளை மேற்கொள்ளல் இடம்பெற்றது.

யுத்த நிலைமைகள் காரணமாக இடம்பெயர்ந்தவர்களை மீளக்குடியமர்த்துதல் ஆரம்பிக்கப் பட்டதும் அதிகாரசபையின் சேவைகளை அப்பிரதேசங்களுக்கு வழங்குவதற்காக யுனிசெப் நிறுவனத்துடனும் பிற அரச சார்பற்ற அமைப்புக்களுடனும் பேச்சுவார்த்தைகள் மேற் கொள்ளப்பட்டதோடு 2010 ஆம் ஆண்டிலிருந்து அவை நடைமுறைப்படுத்தப்பட உள்ளன.

### 4. ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடுத்தப்பட்ட சிறுவர்களை மீண்டும் சமூகமயப்படுத்துதல்

அரசாங்கத்தின் பொறுப்பில் உள்ள சிறுவர் சிப்பாய்களுக்கு புனர்வாழ்வளிக்கும் பணிக்காக 2007 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இருந்து இற்றைவரை அதிகாரசபை முனைப்பான பங்களிப்பினை நல்கியுள்ளது. குறிப்பாக மேற்படி புனர்வாழ்வுப் பணிகளுக்குப் பொறுப்பாக விளங்குகின்ற ஆணையாளரான நீதி அமைச்சின் செயலாளருடனும் ஏனைய உத்தியோகத்தர்களுடனும் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டதன் மூலமாக இந்நிகழ்ச்சித்திட்டத்தை பலப்படுத்த பங்களிப்புச் செய்துள்ளது. 2008 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் நியமிக்கப்பட்ட புலமைசாலிகள் குழுவினால் ஆயுதப் போராட்டத்திற்காக ஈடுபடுத்தப்பட்ட சிறுவர்களின் பாதுகாப்புக்காக Proposed Policy Framsork on Protective care, Rehabilitation and Reintegration of child Combatants எனும் கொள்கை முன்மொழிவு நடைமுறைப்படுத்தும் பொருட்டு அரசாங்கத்திடம் சமரப்பிக்கப்பட்டது.

### 5. தரவு முறைமை

இவ்வாண்டில் அதிகாரசபையின் தரவு முறைமையை நிறுவுவதற்காகவும் படிப்படியாக இற்றைப்படுத்தவதற்காகவும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கிணங்க கீழே காட்டப்பட்டுள்ள தரவு முறைமை அதிகாரசபையில் அமுலில் உள்ளது.

1. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் பேணி வரப்படுகின்ற சிறுவர் துர்ப்பிரயோக தரவு முறைமை.

2. தேசிய பொலிஸ் சிறவர் துர்ப்பிரயோக தரவு முறைமை (சம்பந்தப்பட்ட தரவுகளுக் கான தகவல்களை பெறல் இடம்பெற்றது.)

3. சுனாமியால் பாதிப்புக்குள்ளான சிறுவர்களின் தரவு முறைமை

மேற்படி தரவு முறைமைகளுக்கு மேலதிகமாக Medico Legal Examination form (MLEF) தொடர்பாக தரவு முறைமையொன்றே ஆரம்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அந்நடவடிக்கைகள் ஆரம்ப கட்டத்திலேயே நிலவுகின்றன. இங்கு தரவுக் களஞ்சியத்தை நிறுவுதல், நிலவுகின்ற மாதிரிப்படிவங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் திருத்தங்களை முன்வைத்தல் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. ஏற்கெனவே பொலிஸ் மற்றும் நீதிமன்ற முறைப்பாடுகளை உறுதிசெய்வதற்கான வழிமுறையாக இந்த மாதிரிப்படிவம் நடைமுறையில் உள்ளது.

சுனாமி அனர்ததம் காரணமாக பாதிப்புள்ளாகிய பிள்ளைகள் சம்பந்தமாக 2005 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பாய்வு அதிகாரசபையிடம் உள்ளது. இந்த மதிப்பாய்வில் உள்ளடக்கப்பட்ட பயனுகரிகளின் எண்ணிக்கை சரியானதாவென்பதை கண்டறியும் பொருட்டு இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பாய்வின் தரவுகள் கீழேயுள்ள அட்டவணை மூலமாக காட்டப்பட்டுள்ளது.

| மாதம் | மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | வகை | பயனுகரிகள் 2005 மதிப்பாய்வின்படி | பயனுகரிகள் 2009 மதிப்பாய்வின்படி | தயாரிப்பு பெற்றோர் கட்டளை | பிற சட்ட நடவடிக்கைக |
|---|---|---|---|---|---|---|---|
| யூன் | கொழும்பு | அனைத்து | பெற்றோர் இருவரையும் இழந்தவர்கள் | 12 | 10 | 10 | 01 |
| | களுத்துறை | களுத்துறை<br>பாணத்துறை<br>வாத்துவை | பெற்றோர் இருவரையும் இழந்தவர்கள் | 11 | 13 | 13 | 04 |
| யூலை | கம்பஹா | அனைத்து | பெற்றோர்கள் இருவர் மற்றும் ஒருவரை இழந்தவர்கள் | 48 | 25 | 03 | 00 |
| | காலி | அம்பலாங்கொட<br>பலபிட்டிய<br>ஹிக்கடுவ<br>கபஹுசந்தர<br>ஹபராதுவ | பெற்றோர்கள் இருவர் மற்றும் ஒருவரை இழந்தவர்கள் | 688 | 386 | 54 | 44 |
| ஆகஸ்ட் | அம்பாந்தோட்டை | அம்பாந்தோட்டை<br>திஸ்ஸமஹாராம<br>தங்காலை<br>அம்பலாந்தோட்டை | பெற்றோர்கள் இருவர் மற்றும் ஒருவரை இழந்தவர்கள் மற்றும் கைவிட்ட | 1219 | 662 | 107 | 44 |
| செம்ரெம்பர் | மாத்தறை | மாத்தறை<br>வெலிகம<br>தெவிநுவர<br>திக்வெல்ல | பெற்றோர்கள் இருவர் மற்றும் ஒருவரை இழந்தவர்கள் மற்றும் கைவிட்ட | 390 | 236 | 30 | 11 |
| **கூட்டுத்தொகை** | | | | **2,368** | **1,332** | **217** | **104** |

- *சுனாமிக்குப் பின்னர் வயதினைத் தாண்டுவதால் 21 வயதுக்கு மேற்பட்ட பயனுகரிகள் இத்தரவுத்தளத்தில் இருந்து நீக்கப்படுவர்.*

**சட்ட அமுலாக்கல் பிரிவு**

சட்டத்தைப் பலப்படுத்துவதன் மூலமாகவும் துஷ்ப்பிரயோகம் செய்பவர்களுக்கு எதிராக சட்டத்தைக் கடுமையாக அமுலாக்குவதன் மூலமாகவும் சிறுவர் துர்ப்பிரயோகத்தைக் குறைப்பதற்கேதுவாக சமூகத்தை உள்ளுணர்வு படைத்ததாக மாற்ற முடியுமென தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை அடிப்படையில் நம்புகின்றது.

இதன் பொருட்டு அதிகாரசபையின் சட்ட அமுலாக்கல் உத்தியோகத்தர்களின் தலைமையில் ஒரு கூறு நிறுவப்பட்டுள்ளதோடு இக்கூறு மூலமாக அதிகாரசபைக்கு அறிவிக்கப்படுகின்ற சிறுவர் துஷ்ப்பியோக முறைப்பாடுகள் நாட்டின் பொலிஸ் நிலையங் களுக்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டு புலனாய்வு செய்யப் படுவதோடு அத்தகைய நடவடிக்கைகளுக்காக அதிகாரசபையின் பொலிஸ் கூறுக்கும் முறைப்பாடுகள் ஆற்றுப்படுத்தப்படுகின்றன.

அதிகாரசபைக்கு கிடைக்கின்ற முறைப்பாடுகள் பற்றி ஆவணப்படுத்தப்பட்ட தகவல்களைப் பேணிவரும் பொருட்டு சட்ட அமுலாக்கல் பிரிவின் கீழ் மத்திய பதிவேட்டகம் ஒன்றினை நிறுவுதல் இவ்வாண்டில் இடம்பெற்றது. அதேசமயம் மிகவும் ஒழுங்கமைந்த தரவுகளை கணனி மயப்படுத்தலும் இவ்வாண்டில் இருந்து தொடங்கப்பட்டது. சட்ட அமுலாக்கல் உத்தியோகத்தரின் பூரண மேற்பார்வையின் கீழ் இக்கூறின் கடமைப்பணிகள் இடம்பெறுகின்றன.

புதிய முறைப்பாடுகளைப் பதிவுசெய்யும் வழிமுறைக்கு இணங்க பொதுவாக முறைப்பாடுகள் பிரதான 5 வகைப்படுத்தலின் கீழ் பதியப்பட்டன.

| முறைப்பாடுகளின் வகை | பதிவு செய்தல் வகைப்படுத்தல் |
|---|---|
| தண்டனைச் சட்டத்தின் உள்ள சிறுவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற குற்றச்செயல்கள் | CA 01 |
| பராயமடையாத சிறுவர்களை வேலைக்காரத் தொழிலில் ஈடுபடுத்துதல் | CA 02 |
| சிறுவர்களின் பொறுப்பாண்மை மற்றும் பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகள் | CA 03 |
| சிறுவர்களின் கட்டாயக்கல்வி தொடர்பான பணிப்புரைகளின் ஏதேனுமோர் ஏற்பாடு | CA 04 |
| வீட்டு வன்முறைகள் போன்ற மேற்படி வகைப்படுத்தலுக்குள் அடங்காதவை | CA 05 |

*மூலம் : சட்டப்பிரிவு*

2009 ஆம் ஆண்டில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு அறிவிக்கப்பட்ட முறைப்பாடுகள் பின்வருமாறு :

| **துர்ப்பிரயோக வகை** | **அதிகாரசபைக்கு கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை** |
|---|---|
| CA 01 | 702 |
| CA 02 | 72 |
| CA 03 | 108 |
| CA 04 | 79 |
| CA 05 | 342 |
| **மொத்தம்** | **1303** |

*மூலம் : மத்திய பதிவேட்டகம்*

**2009 ஆம் ஆண்டில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு அறிவிக்கப்பட்ட அந்நந்த வகையைச் சேர்ந்த முறைப்பாடுகள் மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கையின் சதவீதமாக**



மேற்படி பதிவாகிய முறைப்பாடுகளுடன் தொடர்புடைய துர்ப்பிரயோகங்கள் பின்வருமாறு

| **துஷ்ப்பிரயோக வகை** | **துஷ்ப்பிரயோகங்களின் எண்ணிக்கை** |
|---|---|
| துஷ்ப்பிரயோகம் | 05 |
| சிறுவர் கருக்கலைத்தல் | 01 |
| சிறுவர்களைப் பிச்சையேந்த ஈடுபடுத்துதல் | 15 |
| பொறுப்பும் பாதுகாப்பும் | 166 |
| சிறுவர் வேலைக்கார சேவை | 79 |
| சிறுவர்களை விவாகம் செய்து வைத்தல் | 07 |
| கட்டாக்கல்வி மீறல் | 103 |
| உடல் ரீதியான தண்டனைகள் | 05 |
| கொடூரம் விளைவித்தல் | 332 |
| வீட்டு வன்முறை | 40 |
| பாரதூரமான பாலியல் துஷ்ப்பிரயோகம் | 120 |
| ஆட்களுக்கிடையிலான கருமையான அநாகரீக செயல்கள் | 26 |
| சட்டபூர்வ நிலைமையின் கீழ் அல்லாத வகையில் பிள்ளையை வளர்த்தெடுத்தல் | 02 |
| முறையிலாப் புணர்ச்சி - பாலியல் வல்லுறவு அல்லாத | 18 |
| முறையிலாப் புணர்ச்சி - பாலியல் வல்லுறவு | 20 |
| கடத்திச் செல்லல் | 54 |
| சிறுவர் படுகொலை | 13 |
| சிறுவர்கள் தொடர்பாக செய்யப்படுகின்ற ஆபாசமான காட்சிகள் | 12 |
| கூட்டிக்கொடுத்தல் | 20 |
| வன்புணர்ச்சி | 94 |
| விற்பனை செய்தல் | 04 |
| பாலியல் தொல்லைகள் | 30 |
| பாலியல் ரீதியாக சுரண்டப்படல் | 08 |

| | |
|---|---|
| பாலியல் செயல்களின்பால் பிள்ளைகளைத் தூண்டுதல் | 02 |
| ஆட்களை வியாபாரம் செய்தல் | 45 |
| சுனாமி அனர்த்தம் | 02 |
| இயற்கைக்கு மாறான பாலியல் செயல்கள் | 06 |
| பிற | 162 |
| **மொத்தம்** | **1391** |

*மூலம் : மத்திய பதிவேட்டகம்*

மாவட்ட ரீதியாக முறைப்பாடுகள் பதிவாகிய விதம் கீழே காட்டப்பட்டவாறு இடம் பெற்றிருந்தது.

| **மாவட்டம்** | **துஷ்ப்பியோகங்களின் எண்ணிக்கை** |
|---|---|
| அம்பாறை | 27 |
| அநுராதபுரம் | 52 |
| களுத்துறை | 91 |
| கேகாலை | 52 |
| குருநாகல் | 101 |
| கொழும்பு | 327 |
| காலி | 91 |
| கம்பஹா | 202 |
| திருகோணமலை | 07 |
| பொலநறுவை | 53 |
| புத்தளம் | 41 |
| பதுளை | 44 |
| மட்டக்களப்பு | 08 |
| மன்னார் | 01 |
| மாத்தளை | 24 |
| மாத்தறை | 47 |

| | |
|---|---|
| மொறாகல | 26 |
| முல்லைத்தீவு | 02 |
| கண்டி | 54 |
| நுவரெலியா | 31 |
| அம்பாந்தோட்டை | 36 |
| இரத்தினபுரி | 68 |
| வவுனியா | 02 |
| யாழ்ப்பாணம் | 02 |
| **மொத்தம்** | **1391** |

*மூலம் : மத்திய பதிவேட்டகம்*



300
250
200
150
100
50
0
263
137
71
63
63
43
41
34
29
26
23
22
22
20
20
16
14
13
7
3
2
1
1
அம்பாறை
அநுராதபுரம்
களுத்துறை
கேகாலை
குருநாகல்
கொழும்பு
காலி
கம்பஹா
திருகோணமலை
பொலநறுவை
புத்தளம்
பதுளை
மட்டக்களப்பு
மன்னார்
மாத்தளை
மாத்தறை
மொனராகலை
முல்லைத்தீவு
கண்டி
நுவரெலியா
அம்பாந்தோட்டை
இரத்தினபுரி
வவுனியா
மாவட்டம்

**விசேட பொலிஸ் புலனாய்வுக் குழு**

அதிகாரசபைக்கு கிடைக்கின்ற சிறுவர் துஷ்ப்பிரயோக முறைப்பாடுகளின் படிப்படியான அதிகரிப்பும் சிறுவர் துஷ்ப்பிரயோகம் சம்பந்தமாக சுயாதீனமான விசாரணைகளை மேற்கொள்ளவேண்டியதன் அவசியப்பாடும் புலனாய்வுப் பணிகளைத் துரிதமாக மேற் கொள்வதற்காகவும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையில் விசேட பொலிஸ் புலனாய்வுக்கூறு 2002 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

சிறுவர் நட்புமிக்க சுற்றுச்சூழலொன்றை பொலிஸ் கூறில் உருவாக்கும் பொருட்டு சிவில் உடைதரித்து சேவையில் ஈடுபட்டுள்ள நிலையப் பொறுப்பதிகாரியை உள்ளிட்ட 22 பொலிஸ் உத்தியோகத்தர்கள் (பெண்கள் 09, ஆண்கள் 13) இக்கூறில் சேவையாற்று கின்றனர். சிறுவர் பாதுகாப்பு பற்றிய பயிற்சிபெற்ற இவ்வுத்தியோகத்தர்கள் புலனாய்வுகளை நெறிப்படுத்துகையிலும் வீடியோ சான்றுகளை நாடாவில் பதியும் போதிலும் சிறப்பாகவும் வினைத்திறன் மிக்கதாகவும் மேற்கொள்கின்றமை அதிகாரசபையைப் போன்றே பொலிஸ் திணைக்களம் பெற்ற வெற்றியாகும்.

2009 ஆம் ஆண்டில் பொலில் புலனாய்வுக் கூறுக்கு 251 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

| தவறு | கிடைத்த முறைப்பாடுகள் ∴ தகவல்கள் எண்ணிக்கை | புலனாய்வு நிறைவு செய்த எண்ணிக்கை | | | புலனாய்வு நிறை செய்யப்படாத | வெளி இடங்களுக்கு ஆற்றுப்படுத்திய |
|---|---|---|---|---|---|---|
| | | நீதிமன்றத்திற்கு அறிக்கையிட்ட | இணக்கம் காணப்பட்ட | பொய்யானசு | | |
| A பாதுகாப்பும் பொறுப்பும் | 32 | 16 | 08 | 04 | 01 | 03 |
| B பாலியல் துஷ்ப்பிரயோகம் | 46 | 24 | - | 07 | 07 | 08 |
| C கூட்டிவிடுதல் | 26 | 10 | - | 05 | 06 | 05 |
| D கடுமையான வெறுக்கத்தக்க செயல்கள் | - | - | - | - | - | - |
| E கொடூரம் விளைவித்தல் | 14 | 06 | - | 01 | - | 02 |
| F வன்புணர்ச்சி | 09 | 06 | - | 01 | | 02 |
| G சிறுவர் வேலைக்கார சேவை | 10 | - | - | 01 | 01 | 08 |
| H இயற்கைக்கு மாறான செயல்கள் | - | - | - | - | - | - |
| I கடத்திச் செல்லல் | 14 | - | - | 06 | - | 08 |
| J பல்வேறு தவறுகள் | 65 | - | 13 | 16 | 19 | 17 |
| K பாலியல் தொல்லை | 14 | 02 | - | 05 | 05 | 02 |
| L தாக்கி காயம் விளைவித்தல் | 14 | - | - | 04 | 04 | 06 |
| M ஆபாசமான வெளியீடுகளை காட்சிப்படுத்தலும் கைவசம் வைத்திருத்தலும் | 01 | 01 | - | - | - | - |
| N பொறுப்பாளராக இருந்து துஷ்ப்பிரயோகம் செய்ய முற்படுதல் | 06 | 04 | - | - | 02 | - |
| கூட்டுத்தொகை | 251 | 69 | 21 | 51 | 47 | 63 |

*அது பற்றிய தகவல்கள் கீழேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.*

*2009 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட மொத்த முறைப்பாடுகள் / தகவல்களின் எண்ணிக்கை*

**2009 ஆம் ஆண்டில் பொலிஸ் புலனாய்வுக்கூறுக்கு அறிவிக்கப்பட்ட முறைப்பாட்டு வகைகளின் எண்ணிக்கை - வரைபடம் சார்ந்ததாக**




**முறைப்பாடுகள் தகவல்கள் பற்றி மேற்கொண்ட செயற்பாடுகள் - மொத்த முறைப்பாடுகளின் சதவீதமாக**



## நிகழ்ச்சித்திட்டப் பிரிவு

அதிகாரசபையின் நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்தலும் செயலமர்வுகளை நடாத்துதலும் நிகழ்ச்சித்திட்டப்பிரிவு மூலமாக மேற்கொள்ளப்படுகின்றது. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்பாட்டுத் திட்டத்தின் உள்ள கடமைப்பணிகளின் பெரும்பகுதி நிகழ்ச்சிதிட்டப் பிரிவு மூலமாகவே ஈடேற்றப்படுகின்றது. அதிகாரசபையினால் திட்டமிடப்படுகின்ற பெரும்பாலான நிகழ்ச்சித்திட்டங்கள் நிகழ்ச்சித்திட்டப் பிரிவினாலேயே அமுலாக்கப்படுகின்றது. அதற்கிணங்க அடிமட்டத்தில் இருந்து தேசிய மட்டம் வரையிலான விழிப்பூட்டல் நிகழ்ச்சிகள், கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் நிகழ்ச்சித்திட்டப் பிரிவு மூலமாகவே மேற்கொள்ளப்படுகின்றன.

மாவட்ட உத்தியோகத்தர்களின் இணைப்பாக்கம் மற்றும் மாவட்ட உத்தியோகத்தர் களுக்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதலும் அரச சார்பற்ற அமைப்பாண்மைகள் மற்றும் அதிகாரசபைக்கு இடையிலான இணைப்பாக்கமும் நிகழ்ச்சித்திட்டப்பிரிவு மூலமாக மேற்கொள்ளப்படுகின்ற கடமைகளுள் சிலவாகும்.

## தொழில்வாண்மையாளர்களின் திறன் விருத்தி

சிறுவர்களுடன் செயலாற்றுகின்ற மற்றும் சிறுவர்களுக்காக சேவையை வழங்குகின்ற தொழில்வாண்மையாளர்களுக்காக சிறுவர் நேயமுள்ள சேவையின் பொருட்டு அவசியமான தனியார் திறன்களை விருத்தி செய்வதே இதன் நோக்கமாகும். இதன்கீழ் பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

### பட்டப்பின்நிலை மட்டத்தை எதிர்பார்த்துள்ள நிபுணத்துவ மருத்துவர்கள் மற்றும் மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு விழிப்பூட்டுதல்

பட்டப்பின்நிலை பட்டப்பயிற்சிக்காக பதிவுசெய்துள்ள நிபுணத்துவ மருத்துவர்களுக்கும் மருத்துவ உத்தியோகத்தர்களுக்கும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் கடமைகள், சிறுவர் துஷ்ப்பிரயோகம் தொடர்பான சட்டங்கள் மற்றும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைககள் பற்றி விழிப்பூட்டுதல் அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படுகின்றது. இதன் பொருட்டு பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

| திகதி | நிகழ்ச்சித்திட்டம் | இடம் | நலன் பெறுநர்கள் |
|---|---|---|---|
| 2009.04.30 | புத்தளம் சட்டமருத்துவ அதிகாரிகளுக்கு விழிப்பூட்டல் | தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை | 13 |
| 2009.08.28 | மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவன மருத்துவ அதிகாரி களுக்கு விழிப்பூட்டல் | தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை | 28 |
| 2009.10.30 | மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவன மருத்துவ அதிகாரி களுக்கு விழிப்பூட்டல் | தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை | 24 |

*மூலம் : நிகழ்ச்சித்திட்டப்பிரிவு*

**குடும்ப சுகாதார சேவகிகள் மற்றும் தாதியர்களை விழிப்பூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டம்**

இவ்வாண்டின் தாதி உத்தியோகத்தர்களின் திறன் அபிவிருத்திக்காக அதிகாரசபை யினால் விழிப்பூட்டல் நிகழ்ச்சிகள் அமுலாக்கப்பட்டன.

| திகதி | இடம் | நலன்பெறுநர்கள் |
|---|---|---|
| 2009.07.07 | முல்லேரியா தாதியர் கல்லூரி | 125 |
| 2009.08.19 | முல்லேரியா தாதியர் கல்லூரி | 25 |
| 2009.10.07 | முல்லேரியா தாதியர் கல்லூரி | 125 |
| 2009.10.14 | கந்தான தாதியர் கல்லூரி | 250 |
| 2007.11.07 | முல்லேரியா தாதியர் கல்லூரி | 125 |

**பாடசாலை சிறுவர்களுக்கு விழிப்பூட்டுதல்**

| திகதி | தலைப்பு | இடம் | நலன் பெறுநர்கள் | பிரிவு |
|---|---|---|---|---|
| 2009.01.09 | சிறுவர் உரிமைகளும் சிறுவர் துஷ்ப்பிரயோகம் | பண்டாரகம வித்தியாலயம் | 500 சிறுவர்கள் | உளச்சமூக |
| 2009.04.07 | சிறுவர் உரிமைகளும் சிறுவர் துஷ்ப்பிரயோகம் | புனித அந்தோனியார் மகளிர் வித்தியாலயம், தெமட்டகொட | 80 சிறுவர்கள் | நிகழ்ச்சித்திட்டம் /உளச்சமூக |
| 2009.04.29 | சிறுவர் உரிமைகளும் சிறுவர் துஷ்ப்பிரயோகம் | புனித மரியாள் வித்தியாலயம், வாத்துவை | 08 சிறுவர்கள் | நிகழ்ச்சித்திட்டம் /உளச்சமூக |
| 2009.06.19 | சிறுவர் உரிமைகளும் சிறுவர் துஷ்ப்பிரயோகம் | கேம்பிரிஜ் வித்தியாலயம், நுவரெலியா | 500 சிறுவர்கள் | உளச்சமூக |
| 2009.12.02 | சிறுவர் உரிமைகளும் சிறுவர் துஷ்ப்பிரயோகம் | பெந்தோட்ட காமினீ மத்திய மகாவித்தியாலயம் | 350 சிறுவர்கள் | உளச்சமூக |
| 2009.10.02 | உளநோய் நீக்கல்துறை உள | இரத்மலான கட்புலனற்றோர், | 200 சிறுவர்கள் | உளச்சமூக |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிகழ்ச்சித்திட்டம் | செவிப்புலனற்றோர் வித்தியாலயம் | | |

*மூலம் : நிகழ்ச்சித்திட்டம் மற்றும் உளச் சமூகப்பிரிவு*

கிழக்கின் நவோதயம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு, புத்தளம் அநுராதபுரம் மற்றம் பொலநறுவை ஆகிய மாவட்டங்களில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டம் அதிகாரசபையினால் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதற்கிணங்க 22 தாய்மார் கிளினிக் நிகழ்ச்சிகள் நிறைவு செய்யப்பட்டதோடு இதன் மூலமாக 700 நலன்பெறுநர்கள் விழிப்பூட்டப்பட்டனர். இதன்பொருட்டு 0.3 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

**சுனாமி அனர்த்தம் காரணமாக பாதிப்புக்குள்ளாகிய பிள்ளைகளை மீண்டும் சமூகமயப் படுத்துவதற்கான வசதிகளை வழங்குதல்.**

2005 இன் 16 ஆம் இலக்கமுடைய சுனாமி சிறப்பேற்பாடுகள் சட்டத்தின் கீழ் சுனாமி பேரழிவினால் தாய் - தந்தை ஆகிய இருவரையும் இழந்த இன்றேல் தாய் அல்லது தந்தையை இழந்த இன்றேல் பாதுகாவலர்களை இழந்த 21 வருட வயது வரையான சிறுவர்களின் பொறுப்பு அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டில் நீதியமைச்சு, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை ஒருங்கிணைந்து பாதிப்புகுள்ளான சிறுவர்களின் பாதுகாப்புக்காக நிகழ்ச்சித்திட்டமொன்றை அமுலாக்கியது. இக்கருத்திட்டத்தின் கீழ் பொறுப்பு நீதிமன்றம் மூலமாக வழங்கப்படுவதோடு, தாய் - தந்தை இருவரையும் இழந்த பிள்ளைகளுக்காக ரூ.10,000/= பணவைப்பினையும் தாய் அல்லது தந்தையை இழந்த பிள்ளைகளுக்காக ரூ.5,600/= பணவைப்பினையும் வழங்கியுள்ளது. இதற்காக ஆசிய வங்கி 40 மில்லியன் ரூபா நிதியுதவி வழங்கியது.

இதுவரை ஏற்படுத்தப்பட்டுள்ள தபாரிப்பு பெற்றோர் மதிப்பீட்டுச் சபைகள் பற்றிய தகவல்கள் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| தொடர் இல. | திகதி | நிகழ்ச்சித்திட்டம் | இடம் | நலன் பெறுநர்கள் |
|---|---|---|---|---|
| 01 | 2009.01.27 | சுனாமி தாபரிப்பு பெற்றோர் மதிப்பீட்டுச் சபை | நன்னடத்தை, சிறுவர் பாதுகாவல் சேவைகள் திணைக்களம், காலி | 07 |
| 02 | 2009.02.02 | சுனாமி தாபரிப்பு பெற்றோர் மதிப்பீட்டுச் சபை | தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை | 01 |
| 03 | 2009.02.16 | சுனாமி தாபரிப்பு பெற்றோர் மதிப்பீட்டுச் | நன்னடத்தை, சிறுவர் பாதுகாவல் சேவைகள் | 05 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சபை | திணைக்களம், காலி | |
| 04 | 2009.04.21 | சுனாமி தாபரிப்பு பெற்றோர் மதிப்பீட்டுச் சபை | நன்னடத்தை, சிறுவர் பாதுகாவல் சேவைகள் திணைக்களம், காலி | - |
| 05 | 2009.05.26 | சுனாமி தாபரிப்பு பெற்றோர் மதிப்பீட்டுச் சபை | நன்னடத்தை, சிறுவர் பாதுகாவல் சேவைகள் திணைக்களம், காலி | - |
| 06 | 2009.06.16 | சுனாமி தாபரிப்பு பெற்றோர் மதிப்பீட்டுச் சபை | நன்னடத்தை, சிறுவர் பாதுகாவல் சேவைகள் திணைக்களம், காலி | - |
| 07 | 2009.11.06 | சுனாமி தாபரிப்பு பெற்றோர் மதிப்பீட்டுச் சபை | நன்னடத்தை, சிறுவர் பாதுகாவல் சேவைகள் திணைக்களம், காலி | மாத்தறை 10<br>காலி 02<br>(தாய் - தந்தை இருவரையும் இழந்த) |
| 08 | 2009.11.17 | சுனாமி தாபரிப்பு பெற்றோர் மதிப்பீட்டுச் சபை | நன்னடத்தை, சிறுவர் பாதுகாவல் சேவைகள் திணைக்களம், காலி | மாத்தறை 10<br>காலி 02<br>(தாய் - தந்தை இருவரையும் இழந்த) |
| 09 | 2009.12.11 | சுனாமி தாபரிப்பு பெற்றோர் மதிப்பீட்டுச் சபை | நன்னடத்தை, சிறுவர் பாதுகாவல் சேவைகள் திணைக்களம், காலி | 28<br>(தாய் - தந்தை இருவரையும் இழந்த) |
| 10 | 2009.12.14 | சுனாமி தாபரிப்பு பெற்றோர் மதிப்பீட்டுச் சபை | நன்னடத்தை, அலுவலகம், மாத்தறை | அம்பாந்தோட்டை 94<br>(தாய் - தந்தை இருவரையும் இழந்த) |
| 11 | 2009.12.30 | சுனாமி தாபரிப்பு பெற்றோர் மதிப்பீட்டுச் சபை | நன்னடத்தை, அலுவலகம், அம்பாந்தோட்டை | மாத்தறை 11<br>காலி 03<br>(தாய் - தந்தை இருவரையும் இழந்த) |

*மூலம் : நிகழ்ச்சித்திட்டப் பிரிவு*

### திரிதரு பியச வளமையத்தைப் பேணிவருதல்

பெற்றோர்கள் வெளிநாடு செல்லல், தாய் - தந்தை இருவருமே தொழிலுக்குச் செல்லல் போன்ற நிலைமைகள் காரணமாகவும் பிள்ளைகளின் பாதுகாப்புக்கான முறையான வேலைத்திட்டமொன்றை அமுலாக்க இயலாமல் நிர்க்கதி நிலையுறுகின்ற பெற்றோர்கள் காரணமாகவும் பிள்ளைகள் துர்ப்பிரயோகத்திற்கு இரையாகும் வாய்ப்பு அதிகம் நிலவுகின்றது. இந்நிலைமையைத் தடுப்பதற்காகவும் பிள்ளைகளின் ஆளுமை விருத்தியை மேம்படுத்துவதற்காகவும் பொழுதுபோக்கு வசதிகள் போன்றவற்றை அனுபவிப்பதற்கான வாய்ப்பினை வழங்குவது இந்த வள மையங்களைத் தாபிப்பதற்கான நோக்கமாகும்.

1. கல்முனை இஸ்லாமாபாத் சுனாமி வீடமைப்புப் தொகுதயில் இதன் முதலாவது மையம் நிறுவப்பட்டுள்ளது.
2. குருநாகல் மாவட்டத்தின் இப்பாகமுவ பிரதேச செயலகப் பிரிவில் கிம்புல்வானாஓய குடியிருப்பில் (வெளிநாடு சென்றுள்ள பெற்றோர்களின் பிள்ளைகளுக்காக)
3. அநுராதபுர மாவட்டத்தின் விஜயபுர குடியிருப்பில் (விவசாய சமுதாயத்தின பிள்ளைகளுக்காக)
4. புத்தளம் மாவட்டத்தின் புத்தி மீன்பிடிக் கிராமத்தில் (மீன்பிடி சமுதாயத்தின் பிள்ளைகளுக்காக)

இந்த மையங்களுக்கான நிதியுதவிகள் இத்தாலிய அரச சார்பற்ற அமைப்புக்களில் ஒன்றான பர்சொன் கோமே நோய் (Person come noi) நிறுவனத்தில் இருந்து வழங்கப் படுவதோடு இவ்வாண்டில் மையங்களைப் பேணிவரும் பொருட்டு 6.4 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

## உளச் சமூகப்பிரிவு

அதிகாரசபையின் உளச்சமூகப் பிரிவின் அடிப்படைக் கடமையாக அமைவது துஷ்ப்பிரயோகத்திற்கு இலக்காகி பாதிப்புக்குள்ளாகிய சிறுவர்களின் உள நிலையை நல்ல நிலைக்கு கொண்டுவந்து மீண்டும் சமூகமயப்படுத்தும் பொருட்டு அவசியமான நடவடிக்கை களை மேற்கொள்வதாகும். இங்கு உளரீதியான ஆலோசனை மற்றும் உளரீதியான நோய் நீக்கல் துறைச் சிகிச்சைக்காக பாதிப்புக்குள்ளாகிய சிறுவர்களை ஆற்றுப்படுத்துவது பிரதான இடம் வகிக்கின்றது. அத்துடன் சிறுவர் துஷ்ப்பிரயோகத்தைத் தடுப்பதற்கு அவசியமான புரிந்துணர்வினை சமுதாயத்திற்கு வழங்குகையில் வளவாளர்களாக செயலாற்றுதலைப் போன்றே அதிகாரசபைக்கு கிடைக்கின்ற முறைப்பாடுகளின் உளச்சமூக ரீதியான புலனாய்வுக்காக மாவட்ட உத்தியோகத்தர்களை நெறிப்படுத்துதல் இப்பிரிவின் கடமைப் பொறுப்பில் அடங்குகின்றது. அதிகாரசபையின் ஏனைய பிரிவுகளுடன் இணைப்பாக்கம் செய்து உளச்சமூகப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. அத்துடன் விழிப்பூட்டல் நிகழ்ச்சிக்காக இப்பிரிவைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் வளவாளர்களாக பங்கேற்கின்றனர்.

### உளச்சமூகப் பிரிவினால் ஆலோசனை சேவைகள் வழங்கப்படுதல்

சிறுவர் துஷ்ப்பிரயோகம் மற்றும் சிறுவர் உரிமை மீறல்கள் காரணமாக பாதிப்புக்குள்ளாகி யவர்களாக மாறுகின்ற சிறுவர்களின் உளச் சுகாதாரத்தை மேம்படுத் அவசியமாகின்ற உள ரீதியான ஆலோசனை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் உளச்சமூகப் பிரிவினால் வழங்கப்படுகின்றது. இதற்கிணங்க இவ்வாண்டுக்காக 237 ஆலோசனை சுற்றுக்கள் நடத்தப்பட்டுள்ளதோடு அதிகாரசபைக்கு வெளியே சென்று 84 ஆலோசனை சேவை சுற்றுகள் நடாத்தப்பட்டுள்ளன.

| **மாதம்** | **சேவைபெறுர்** | **ஆலோசனை தடவைகள்** |
|---|---|---|
| சனவரி | 14 | 12 |
| பெப்ரவரி | 08 | 12 |
| மார்ச் | 24 | 19 |
| ஏப்றில் | 17 | 19 |
| மே | 35 | 37 |
| யூன் | 19 | 16 |
| யூலை | 18 | 20 |
| ஆகஸ்ட் | 15 | 18 |
| செப்ரெம்பர் | 42 | 30 |
| ஒக்டோபர் | 20 | 19 |
| நவம்பர் | 21 | 18 |
| டிசெம்பர் | 22 | 17 |
| **மொத்தம்** | **255** | **237** |

*மூலம் : உளச்சமூகப் பிரிவு*

உளச்சமூகப் பிரிவினால் இவ்வாண்டில் இருந்து அதிகாரசபைக்கு கிடைக்கின்ற முறைப்பாடு களில் உளச்சமூக ரீதியாக அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய முறைப்பாடுகள் தொடர்பில் செயலாற்றப்படுகின்றது. அதற்கிணங்க இவ்வாண்டில் அப்பிரிவினால் முறைப்பாடுகள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட பணிகளின் முன்னேற்றம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| மாதம் | மொத்த முறைப்பாடு களின் எண்ணிக்கை | சட்டப் பிரிவுக்கு ஆற்றுப் படுத்திய | தொடர் நடவடிக் கைக்காக ஆற்றுப் படுத்திய | சம்பவக் கலந்துரையாட லுக்காக ஆற் றுப்படுத்திய | அதிகாரசபையின் மாவட்ட இணைப்பு உத்தியோகத்தர்கள் |
|---|---|---|---|---|---|
| சனவரி | 22 | - | - | 02 | 22 |
| பெப்ரவரி | 09 | 02 | - | - | 09 |
| மார்ச் | 05 | - | - | - | 05 |
| ஏப்றில் | 09 | - | - | - | 09 |
| மே | 14 | - | - | - | 14 |
| யூன் | 19 | 04 | - | - | 19 |
| யூலை | 45 | 10 | - | - | 45 |
| ஆகஸ்ட் | 28 | 08 | 01 | - | 28 |
| செப்ரெம்பர் | 29 | 16 | 01 | - | 29 |
| ஒக்டோபர் | 28 | 12 | 02 | - | 28 |
| நவம்பர் | 16 | 05 | - | - | 16 |
| டிசெம்பர் | 08 | 15 | 01 | | 08 |

***மூலம் : உளச்சமூகப் பிரிவு***

**பங்கேற்ற பயிற்சி செயலமர்வுகள்**

- 2009.02.17 ஆந் திகதி இலங்கை மன்றக் கல்லூரியில் நடத்தப்பட்ட அழுத்த முகாமைத்துவ செயலமர்வு

- 2009.02.15 - 21 ஆந் திகதி வரை இலங்கை செஞ்சிலுவை சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ‘அப்பி சுரெக்கெமு’ நிகழ்ச்சி.

- 2009.03.24 ஆந் திகதி இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்ற 'செமட்ட சித்தும்ப' உள மற்றும் சமுதாய சுகாதாரம் தொடர்பான செயலமர்வு

- 2009.03.27 ஆம் திகதி சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் நடத்தப்பட்ட 'தொழில் நுட்பமும் சிறுவரும்' எனும் செயலமர்வு

- 2009.03.17 ஆந் திகதி நாராஹேன்பிட்ட குருதி மாற்றூட்டல் நிலையத்தில் நடைபெற்ற 'பாதிப்புள்ளானவர்களின் மேடை' உள நோய்க்கு இரையானவர்கள் பற்றிய செயலமர்வு.

- 2009.08.13 அதிகாரசபை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற வீடியோ சான்றுகளை நாடாவில் பதிவதற்கு முன்னர் சிறுவர்களை தயார்நிலைப்படுத்தும் அதனை சிறந்த மட்டத்தில் ஈடேற்றக்கூடிய விதம் பற்றி நடைபெற்ற செயலமர்வு.

- 2009.08.17 - 19 வரை சமூக சேவைகள் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட முரண்பாட்டுத் தீர்வு தொடர்பான செயலமர்வில் பங்கேற்றமை.

## கர்ப்பிணித் தாய்மார்களுக்கு விழிப்பூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டம்

பிரசவத்திற்கு முற்பட்ட கட்டத்தில் இருந்தே பிள்ளைகளைப் பாதுகாத்துக் கொள்ளல் மற்றும் குடும்பத்தில் சிறுவர் நட்புமிக்க சுற்றுச்சூழலைக் கட்டியெழுப்புவதற்காக சிறுவர்களைத் துஷ்ப்பிரயோகங்களிலிருந்து தடுத்தல் அதனோடு தொடர்புடைய சட்டதிட்டங்கள் சம்பந்தமாக கர்ப்பிணித் தாய்மார்கள், தாய்மார்கள் மற்றும் சுகாதார உத்தியோகத்தர்களுக்கு விழிப்பூட்டுதல் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாக அமைந்தது.

சிறுவர் அபிவிருத்தி, மகளிர் மேம்பாடு அமைச்சு மூலமாக அமுலாக்கப்பட்ட தேசிய சிறுவர் செயற்பாட்டுத் திட்டத்தில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு விழிப்பூட்டுவதற்கான இலக்காகக் கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை 20 ஆகவும் நலன்பெறுநர்களின் எண்ணிக்கை 600 ஆகவும் அமைந்த போதிலும் இரத்தினபுரி மாவட்டத்தில் 05 நிகழ்ச்சிகளும் மன்னார் மாவட்டத்தில் 05 நிகழ்ச்சிகளும், பொலநறுவை மாவட்டத்தில் 07 நிகழ்ச்சிகளும் அம்பாறை மாவட்டத்தில் 05 நிகழ்ச்சிகளும் என அமையத்தக்கதாக 22 நிகழ்ச்சிகள் 0.20 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டதோடு நலன்பெறுநர்களின் எண்ணிக்கை 990 ஆகும்.

### உள நோய் நீக்கல் நிகழ்ச்சித்திட்டங்கள்

- 2009.01.04 ஆந் திகதி ரன்முத்துகல அத்தாட்சிப்படுத்திய பாடசாலையின் அனைத்து வதிவிட மாணவர்கள் மற்றும் பதவியணிக்காக உளநோய் நீக்கல்துறை மற்றும் ஆளுமை விருத்தி பற்றிய செயலமர்வு நடாத்தப்பட்டது.

- 2009.03.08 ஆந் திகதி கொட்டாவ, பன்னிபிட்டிய, நக்மல்கம சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் (மகளிர்) வதிவிட பாதிப்புக்குள்ளாகிய 38 சிறுவர்களுக்காக படைப் பாற்றல் மிக்க உளநோய்நீக்கல்துறை மற்றும் ஆளுமை விருத்திபற்றிய செயலமர்வு நடாத்தப்பட்டது.

- 2009.04.06 ஆம் திகதி கொட்டாவ, பன்னிபிட்டிய ருக்மல்கம (மகளிர்) சிறுவர் அபிவிருத்தி நிலைய மேற்பார்வையாளர் மற்றும் 60 சிறுவர்களுக்காக இல்லத்திலுள்ள பிள்ளைகளுடன் சிநேகபூர்வமாக எவ்வாறு செயலாற்றுவது என்பது பற்றி விழிப்பூட்டல்

- 209.07.24 - 24 ஆகிய தினங்களில் படைப்பாற்றல் மிக்க நோய் நக்கல்துறையல் திருமதி வின்டா றோஸ் அவரக்ளின் பங்கேற்புடன் அம்பேபுஸ்ஸ புனர்வாழ்வு முகாமின் வதிவிட யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கான படைப்பாற்றல் மிக்க நோய் நீக்கல்துறை மற்றும் ஆளுமை விருத்தி பற்றிய நிகழ்ச்சியொன்றை நடத்தியமை.

- 2009.07.08 - 29 ஆந் திகதிகளில் ரன்முத்துகல அத்தாட்சிப்படுத்திய மகளிர் பாடசாலையின் 40 வதிவிட சிறுவர்களுக்காக நோய் நீக்கல் மற்றும் ஆளுமை விருத்தி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

- 2009.10.02 ஆம் திகதி இரத்மலான கட்புலனற்றோர் மற்றும் செவிப்புலனற்றோர் பாடசாலைளைச் சேர்ந்த சிறுவர்களுக்கான படைப்பாற்றல் மிக்க நோய்நீக்கல் மற்றும் ஆளுமை விருத்தி பற்றிய நிகழ்ச்சி நடத்தப்பட்டமை.

**விழிப்பூட்டலுக்கான உளச்சமூக நிகழ்ச்சித்திட்டங்கள்**

- 2009.10.02 ஆம் திகதி பண்டாரகம வித்தியாலயத்தின் 7,8,9,10,11,12 தரங்களைச் சேர்ந்த 500 மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமான சிறுவர் துர்ப்பிரயோகம் மற்றும் சிறுவர் உரிமைகள் பற்றிய விழிப்பூட்டல் நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

- 2009.03.13 ஆந் திகதி தேசிய சிறுவர் பாதுபாப்பு அதிகாரசபையில் நடைபெற்ற செயலமர்வில் 60 நலன்பெறுநர்களுக்கு சிறுவர் துரப்பிரயோகம் மற்றும் சிறுவர் உரிமைகள் பற்றிய விழிப்பூட்டல் நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

- 2009.04.07 ஆம் திகதி தெமட்டகொட புனித அந்தோனியார் மகளிர் வித்தியாலயத்தின் 63 சிறுவர்களுக்காக சிறுவர் துரப்பிரயோகம் மற்றும் சிறுவர் உரிமைகள் பற்றி விழிப்பூட்டல்

- 2009.06.19 ஆம் திகதி ஹற்றன் கேம்பிரிஜ் வித்தியாலயத்தின் மாணவர்களுக்கு சிறுவர் நேயமுள்ள சுற்றாடலைக் கட்டியெழுப்புதல் பற்றி விழிப்பூட்டல்

- 2009.08.24, 25 மற்றும் 26 ஆகிய திகதிகளில் வடக்கு மற்றும் கிழக்கு நவோதய மாவட்ட உத்தியோகத்தர்களைப் பயிற்றுவித்தல்.

- 2009.10.09 ஆம் திகதி நீர்கொழும்பு நிவுஸ்ரன் மகளிர் விததியாலயத்தின் 8,9,10 தரங்களைச் சேர்ந்த மாணவர்களுக்காக சிறுவர் துர்ப்பிரயோகம் மற்றும் சிறுவர் உரிமைகள் பற்றி விழிப்பூட்டுதல்

- 2009.12.02 ஆந் திகதி பென்தோட்டை காமினீ மத்திய மகா வித்தியாலயத்தின் 8, 9, 10 தரங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான சிறுவர் துர்ப்பிரயோகம் மற்றும் சிறுவர் உரிமைகள் பற்றி விழிப்பூட்டல்.

**வளப்பங்கேற்பினை வழங்குதலும் பிற செயற்பாடுகளும்**

- 2009.02.12 ஆம் திகதி கம்பஹா தம்மாலோக சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த பாதிப்புக்குள்ளாகிய சிறுவர்கள் சம்பந்தமான ஆலோசனைகளை வழங்கியமையும் புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளலும்.

- 2009.03.27 ஆம் திகதி CHA நிறுவனம் மூலமாக ஏற்பாடு செய்யப்பட்ட உளச்சமூக கூட்டமைப்பின் கூட்டத்தில் பங்கேற்றல்

- 2009.03.09 ஆம் திகதி பாதிப்புள்ளான ஒரு பிள்ளை சம்பந்தமான புலனாய்வுக்காக காலி ஊரகஸ்மங்ஹந்திய பிரதேசத்திற்குச் சென்றமை

- 2009.03.31 ஆம் திகதி இலங்கை மன்றக் கல்லூரியில் ஆலோசனை டிப்ளோமா பாடநெறியைப் பயிலும் மமாணவர்களின் கட்டுறு பயில்வில் பற்கேற்றமை

- 2009.04.02 ஆந் திகதி ஒருவருக்கான கட்டுறு பயிற்சியளித்தமை.

- 2009.04.10 ஆம் திகதி பாதிப்புக்குள்ளாகிய ஒரு பிள்ளை சம்பந்தமாக புலனாய்வு செய்யும் பொருட்டு இரத்தினபரி சட்ட மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகத்திற்குச் சென்றமை

- 2009.04.24 ஆந் திகதி கட்டுறு பயிற்சியளித்தமை

- 2009.04.27 ஆந் திகதி கட்டுறு பயிற்சியளித்தமை-

- 2009.05.04 ஆந் திகதி ஒருவருக்கான கட்டுறு பயிற்சியளித்தமை

- 2009.05.05 ஆம் திகதி கட்டுறு பயிற்சியளித்தமை

- 2009.05.27 ஆந் திகதி கட்டுறு பயிற்சியளித்தமை

- 2009.06.19 ஆந் திகதி பாடசாலை செல்லாத பிள்ளைகள் பற்றிய தகவல்களைப் புலனாய்வு செய்யும் பொருட்டு றோயல் கல்லூரிக்குச் சென்றமை

- 2009.06.03 ஆந் திகதி யக்கல சிறுவர் இல்லத்தில் பாதிப்புக்குள்ளாகிய பிள்ளையொன்று பற்றிய தகவல்களைப் புலனாய்வு செய்யச் சென்றமை

- 2009.06.10 ஆம் திகதி நுகேகொட மெத்செவன நிலையத்தில் இருந்த தெலசீமியா நோயினால் பீடிக்கப்பட்ட ஒரு பிள்ளை பற்றிய புலனாய்வுக்காக சென்றமை.

- 2009.08.26 ஆந் திகதி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சுதேச சேவையின் வாலிப வயதில் உள்ள பிள்ளைகளுடன் செயலாற்றுவதற்கான திறன்கள் எனும் தலைப்பில் நடத்தப்பட்ட வானொலி நிகழ்ச்சியில் பங்கேற்றமை

- 2009.09.16 ஆந் திகதி நீர்கொழும்பு நிசல தியசெவன சிறுவர் இல்லத்தின் புலனாய்வில் பங்கேற்றமை

- 2009.12.29 ஆம் திகதி நீர்கொழும்பு நிசலதிய செவன சிறுவர் இல்லத்தில் இருந்து தப்பியோடிச் சென்ற 5 சிறுவர்கள் பற்றிய புலனாய்வினை மேற்கொண்டமை.

## சட்டப்பிரிவு

அதிகாரசபையின் சட்டப்பிரிவு மூலமாக அதிகாரசபையின் கடமைப் பொறுப்புக்களை ஈடேற்றிக்கொள்ள அவசியமான சிறுவர் துஷ்ப்பிரயோகத்தை தடுப்பதற்கான சட்ட ரீதியான, நிர்வாக ரீதியான அல்லது பிற திருத்தங்களை விதந்துரைத்தல், அனைத்துவிதமான சிறுவர் துர்ப்பிரயோகங்களுடன் தொடர்புடைய சட்டத்தை நடைமுறைப்படுத்த ஆலோசனை வழங்குதல் மற்றும் சிறுவர் துஷ்ப்பிரயோகங்கள் சம்பந்தப்பட்ட அனைத்துவிதமான புலனாய்வுகள் மற்றும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் பற்றிய முன்னேற்றத்தை ஒழுங்குறுத்துதல் அத்துடன் சம்பந்தப்பட்ட நீதிமன்றங்களில் தோற்றுதல் போன்றவை ஈடேற்றப்படுகின்றன.

சிறுவர்களுக்கு எதிராக புரியப்படுகின்ற துர்ப்பிரயோகங்கள் தொடர்பான முறைப்பாடுகள் தபால் மற்றும் தொலைநகல் மூலமாகவும் மின்னஞ்சல் மூலமாகவும் தொலைபேசி மூலமாகவும் அதிகாரசபைக்கு கிடைக்கின்றன. இதில் கணிசமானவை அநாமதேய தகவல் களாக அமைகின்றன. இத்தகைய அநாமதேய முறைப்பாடுகள் பெரும்பாலும் சமூக கூருணர்வு படைத்த மனிதர்கள் கண்ணுறுகின்ற சிறுவர் துஷ்ப்பிரயோக சம்பவங்களாகும். ஆயினும் ஒரு சிலரால் பொய்யான தகவல்கள் அதிகாரசபைக்கு வழங்கப்படுவதோடு இவை தனக்கு எதிரான ஆட்களுக்கு எதிராக குற்றச் செயலொன்றில் சிக்க வைக்கும் நோக்கத் துடனேயே வழங்கப்படுகின்றதென்று அதிகாரசபையின் கருத்தாகும்.

2009 ஆம் ஆண்டில் பெப்ரவரி மாத இறுதிவரை அதிகாரசபைக்கு கிடைத்த முறைப்பாடுகள் அனைத்தும் முதற்கண் சட்டப்பிரிவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டதோடு அம் முறைப்பாடுகளின் தன்மைக்கிணங்க புலனாய்வும் ஒழுங்குறுத்தலும் செய்யப்பட வேண்டிய முறைப்பாடு எனில் சட்ட அமுலாக்கல் கூறு அல்லது பொலிஸ் புலனாய்வுக் கூறுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன. அத்துடன் சிறுவர் உரிமை மீறல் சம்பந்தமான முறைப்பாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு, தொழில் திணைக்களம், கல்வி அமைச்சு போன்ற நிறுவனங்களிடம் ஆற்றுப்படுத்தப்பட்டன.

எவ்வாறாயினும் 2009 மார்ச் மாதம் 01 ஆந் திகதியில் இருந்து முறைப்பாடுகள் அனைத்தும் மத்திய பதிவேட்டகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டு, பதிவுசெய்யப்பட்ட பின்னர் சட்டஅமுலாக்கல் உத்தியோகத்தர்களிடம் ஆற்றுப்படுத்தப்பட்டு அவர் குறிப்பெழுதிய பின்னர் சட்ட அமுலாக்கல் உத்தியோகத்தர் பிரிவு மூலமாக புலனாய்வுக்காகவும் ஏற்புடைய நடவடிக்கைகளுக்காகவும் சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு விநியோகித்தல் இடம்பெறுகின்றது.

### முறைப்பாடுகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

அதிகாரசபைக்கு கிடைத்த முறைப்பாடுகள் மத்தியில் 517 முறைப்பாடுகள் அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு சட்டப்பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

## வழக்கு நடவடிக்கைகள்

ஒவ்வொரு பிரதேசத்திலும் அமைந்துள்ள நீதிமன்றங்களில் சிறுவர் துஷ்ப்பிரயோகம் தொடர்பான வழக்கு நடவடிக்கைகளை நெறிப்படுத்துதல் சட்டப் பிரிவினால் மேற்கொள்ளப் படுகின்றது. இங்கு சுனாமி அனர்த்தம் காரணமாக தாய் அல்லது தந்தையை அல்லது தாய்தந்தை ஆகிய இருவரையும் அல்லது பாதுகாவலரை இழந்த பிள்ளைகளின் பாதுகாப்புக்காக மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளுக்கான வழக்கு நடவடிக்கைகளை நெறிப்படுத்துதல் சட்டப்பிரிவின் அடிப்படைப் பொறுப்பாகும். 2009 ஆம் ஆண்டில் 217 வழக்குகளுக்காக அதிகாரசபையின் சட்ட உத்தியோகத்தர்கள் பங்கேற்றுள்ளனர்.

| நீதிமன்றம் | பங்குபற்றிய வழங்குனர்களின் எண்ணிக்கை |
|---|---|
| பம்பலப்பிட்டி | 21 |
| பலப்பிட்டி | 43 |
| பத்தேகம | 04 |
| காலி | 86 |
| அம்பாந்தோட்டை | 20 |
| புதுக்கடை | 09 |
| கல்கிஸ்ஸ | 32 |
| கொழும்பு | 01 |
| கல்கமுவ | 01 |
| **மொத்தம்** | **217** |

*மூலம் : சட்டப்பிரிவு*

### வீடியோ சான்றுகளை நாடாவில் பதிதல்

சட்டப்பிரிவினால் ஒழுங்குறுத்தப்படுகின்ற முக்கியமான ஒரு பிரிவாக வீடியோ சான்றுகளை நாடாவில் பதிதலைக் குறிப்பிடலாம். தற்போது நிலவுகின்ற சட்ட அமுலாக்கல் வழிமுறை களின் கீழ் வழக்கு நடவடிக்கைகளின்போது துர்ப்பிரயோகத்திற்கு இலக்காகின்ற பிள்ளைகளிடம் பல தடவைகள் சம்பவம் பற்றிய விடயங்களைக் கேட்டறிவதும் வழக்கு விசாரணைகளின் போது மீண்டும் மீண்டும் கேள்விகளைக் கேட்பதன் காரணமாகவும் பிள்ளைகள் மீண்டும் மீண்டும் துஷ்ப்பிரயோகத்திற்கு இலக்காவதோடு அது பிள்ளைகளின் ஆளுமை விருத்தி மற்றும் உளரீதியான அபிவிருத்தி குன்றுதல் மீது பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. பாலியல் துஷ்ப்பிரயோகங்களுக்கு இலக்காகும் பிள்ளைகள் இங்கு மிகவும் நிர்க்கதி நிலையுறுகின்றனர். இந்நிலைமையைத் தடுப்பதற்காக பாலியல் துர்ப்பிரயோகத்திற்கு இரையாகிய பிள்ளைகளின் சான்றுகளை வீடியோ நாடாவில் பதிந்து சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தின் கட்டளையின் பிரகாரம் மேற்படி நீதிமன்றத்தில் சமர்ப்பித்தல் சட்டக்கூறு மூலமாக மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாண்டில் 23 வீடியோ சான்றுகள் நாடாவில் பதியப்பட்டுள்ளன.

**சிறுவர் துஷ்ப்பிரயோகம் காரணமாக பாதிப்புக்குள்ளாகிய பிள்ளைகளின் மரபணுப் பரிசோதனை**

சிறுவர் துஷ்ப்பிரயோகம் காரணமாக பாதிப்புக்குள்ளாகின்ற பிள்ளைகளின் அடையாளத்தை உறுதிப்படுத்துதல் மற்றும் விசேட நிலைமைகளை இனங்காண்பதற்காக அதிகாரசபையினால் மரபணுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2009 ஆம் ஆண்டில் 0.1 மில்லியன் ரூபா செலவில் 10 மரபணுப் பரிசோதனை சம்பவங்கள் மேற்கொள்ளப்பட்டன.

**வளப்பங்களிப்பினை வழங்குதல்**

சிறுவர் துஷ்ப்பிரயோகம் பற்றிய விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களில் வளப்பங்களிப்பினை வழங்குதல் சட்டப்பிரிவின் உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கிணங்க இவ்வாண்டில் 16 விழிப்பூட்டல் நிகழ்ச்சிகளுக்காக வளப்பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் பல்வேறு நிறுவனங்களுக்கிடையிலான பேச்சுவார்த்தைகளிலும் பங்கேற்கின்றது. அத்தகைய 11 பேச்சுவார்த்தைகளில் தனது பங்களிப்பினை வழங்கியுள்ளது.

இவ்வாண்டில் சிறுவர் துன்புறுத்தலுக்கு எதிரான தினத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்ட வைபவத்தில் குருத்தியாபிமானி விருது வழங்கலை ஏற்பாடு செய்தல் தொடர்பில் சட்டப்பிரிவு பூரண பங்களிப்பினை வழங்கியது.

**மகவேற்பு பற்றிய நூலொன்றை வெளியிட்டமை**

2008 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இருந்தே தொடர்ச்சியாக சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு அறிவிக்கப்பட்ட வளர்ப்புப் பிள்ளையாக வைத்துக்கொள்ள சிறுவர்களைக் கடத்திச் செல்லல், சிறுவர்களை பணத்திற்காக விற்றல் மற்றும் பணம்கொடுத்து வாங்கிய ஒருசில சம்பவங்களை எதிர்நோக்க வேண்டியநிலை அதிகாரசபையின் சட்டப்பிரிவுக்கு ஏற்பட்டது. பெரும்பாலும் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறக் காரணம் பிள்ளைகளைத் தத்தெடுத்து வளர்த்தல் பற்றிய சட்டரீதியான அறிவு குறைவாக காணப்படுவதே ஆகும்.

எனவே இந்நிலைமையில் இருந்து சமூகத்தை மீட்டெடுக்க அது பற்றிய அறிவினை

சமூகத்திற்கு வழங்குவதற்காகவும், சிறுவர் துரப்பிரயோகம் பற்றியும் அதிகாரசபையின் கடமைகள் பற்றி மக்களுக்கு விழிப்பூட்டுவதற்காகவும் சட்டப்பிரிவைச் சேர்ந்த சட்டத்தரணி திரு. ரொஹான் விஜேசேன **'மகவேற்பு, பிள்ளைகளின் பொறுப்பாண்மை மற்றும் பாதுகாவலர்களின் உயிர்களை அழித்தல் தொடர்பான சட்டம்'** எனும் நூல் வெளியிடப்பட்டது. இது மயின்ட் சொலுசன் நிறுவனத்தின் பூரண அனுசரணையின் பேரில் அச்சிடப்பட்டு 2009 ஒக்டோபர் 01 ஆந் திகதியன்று தேசிய சிறவர் தினத்தன்று வெளியிடப்பட்டது.

**திட்டமிடல் தகவல் மற்றும் ஊடகப்பிரிவு**

மக்களுடன் மிகவும் நெருங்கி தேசிய சிறுவர் பாதுகாப்பு பற்றி, அதன் கடமைப்பணிகள் பற்றி மற்றும் சிறுவர் துஷ்ப்பிரயோகத்தை தடுத்தல் பற்றி மக்களுக்கு விழிப்பூட்டுதலும், தகவல்களை வழங்குதலும் தகவல் மற்றும் ஊடகப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. அத்துடன் அதிகாரசபைக்கு வருகின்றவர்களுக்கு விழிப்பூட்டுதல் மற்றும் அவர்களுக்கான சுவரொட்டிகள், சிறுவர் உரிமைகள் சாசனம், துண்டுப் பிரசுரங்கள் மற்றும் சிறுவர்களுக்கு உடல்ரீதியான தண்டனைகளைத் தடுப்பதற்கான நூல்களை வழங்குதல் இப்பிரிவினால்

மேற்கொள்ளப்படுகின்றது. தொலைத்தூரங்களில் உள்ளவர்களுக்காக தபால் மூலமாக சம்பந்தப்பட்ட தகவல்கள், சுவரொட்டிகள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் அனுப்பி வைக்கப் படுகின்றன. இதற்கு மேலதிகமாக விரிவுரைகள் மற்றும் செயலமர்வுகளுக்கான பங்களிப்பு வழங்கப்படுகின்றது.

மேற்படி பணிகளுக்கு மேலதிகமாக இவ்வாண்டில் இருந்து தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் திட்டமிடல் விடயத்துறை சம்பந்தமாகவும் இப்பிரிவு செயலாற்றுவதால் அதிகாரசபையின் பணிப்பாளர் சபையினால் ஒப்படைகள் வழங்கப்படுகின்றன. அதற்கிணங்க இற்றைவரை நிலவிய தகவல் மற்றும் ஊடகப்பிரிவு திட்டமிடல் தகவல் மற்றும் ஊடகப்பிரிவு எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டது.

இக்கூறின் பணிகளை கீழேயுள்ளவாறு காட்டமுடியும்.

சிறுவர் பாதுகாப்பு சிறுவர் துஷ்ப்பிரயோகம் மற்றும் சிறுவர் உரிமைகள் பற்றிய தகவல்களை வழங்குதல்

இப் பணியானது தபால், தொலைபேசி, தொலைநகல், மின்னஞ்சல் மூலமாக சிறுவர் பாதுகாப்பு பற்றிய தகவல்கள் தேவைப்படுகின்ற மாணவர்கள், பொதுமக்கள் மற்றும் தொழில்வாண்மையாளர்களால் கோரப்படுவதோடு அவர்களுக்கு சம்பந்தப்பட்ட தகவல்களை வழங்குதல் இப்பிரிவு மூலமாக இடம்பெறுகின்றது. அத்துடன் அதிகரசபைக்கு வருகை தருவதன் மூலமாகவும் தகவல்களைப் பெற்றுக் கொள்பவர்களுக்கு நூல்நிலைய வசதிகள், துண்டுப் பிரசுரங்கள் மற்றும் சுவரொட்டிகள் வழங்கப்படுகின்றன.

**அச்சுத் தொடர்புசாதனங்களை ஒழுங்குறுத்துதல்**

இப்பணிக்காக தினந்தோறும் 09 செய்தித்தாள்கள் (திவயின, லங்காதீப, தினமின, லக்பிம, டேலிநியுஸ், ஐலண்ட், வீரகேசரி மற்றும் வாரஇறுதி செய்தித்தாள்கள் 09 (ஞாயிறு, திவயின, ஞாயிறு லங்காதீப, சிலுமின, லக்பிம, டைம்ஸ், ஒப்சர்வர், ஐலணட், வீரசேகரி, ராவய) அவதானிக்கப்படுகின்றன. இவ்வாண்டில் சிறுவர் துர்ப்பிரயோக சம்பவங்கள் மற்றும் பிற சிறுவர் பாதுகாப்பு பற்றிய செய்திகள்ட ஒழுங்குறுத்தப்பட்ட சந்தர்ப்பங்களளின் எண்ணிக்கை 1684 ஆகும்.

**அச்சுப் பிரசுரங்களை விநியோகித்தல்**

அதிகாரசபையினால் சிறுவர் பாதுகாப்புக்காக வழங்கப்பட்ட பிரசுரங்கள் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன. அதற்கிணங்க சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரங்கள், சிறுநூல்கள், ஸ்ரிக்கர், வீடியோ இறுவட்டுகள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. இவ்வாண்டில் 233 ஆட்கள் சம்பந்தப்பட்ட பிரசுரங்களின் 9885 அளவினைப் பகிரந்தளித்துள்ளனர்.

**இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களுக்கான செய்திகளை வெளியிடல்**

சிறுவர் துஷ்ப்பிரயோக சம்பவங்கள் பற்றிய தகவல்கள் மற்றும் விசேட பணிகள் தொடர்பான செய்திகளையும் செய்தித்தாள் அறிவித்தல்களையும் விடுத்தல் அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கிணங்க இவ்வாண்டில் 21 செய்தி அறிக்கைகள் ஊடகங்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

**அச்சு ஊடக நிகழ்ச்சித்திட்டங்கள்**

இதற்கு மேலதிகமாக சிட்டி, எவ். ஏம். சிரச ரீவி, சுயாதீன தொலைக்காட்சி சேவை, ரூபவாஹினி மற்றும் தெரண இலத்திரனியல் ஊடகங்களில் உரையாடல் நிகழ்ச்சிகள் ஆண்டு பூராவிலும் ஒலி.·.ஒளி பரப்பப்பட்டன. அதிகாரசபையின் தலைவர் மற்றும் சட்டப் பிரிவின் உத்தியோகத்தர்கள் இந்நிகழ்ச்சிகளில் பங்கேற்றதுடன் இப் பணிக்காக ஊடகங் களின் உச்சமட்ட ஒத்துழைப்பு அதிகாரசபைக்கு கிடைத்தது.

**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் நூல்நிலையம்**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு இற்றைவரை ஒரு குறைபாடாக விளங்கிய நூல்நிலையம் இவ்வாண்டின் தொடக்கத்தல் ஆரம்பிக்கப்பட்டது. சிறுவர் துர்ப்பிரயோகம் பற்றிய இலக்கியங்களை விருத்தி செய்தலுக்காக அத்துறையில் ஆராய்ச்சிகளை மேற்கொள்கின்றன புலமைசார் சமுதாயத்தினருக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தேவையான தகவல்களை வழங்குவதும் அச் சமுதாயத்தினரது ஆராய்ச்சிகள் மற்றும் கண்டுபிடிப்புகள் மூலமாக இந்நூல் நிலையத்தைக் கட்டிவளர்ப்பதுமே இதன் மூலமாக எதிர்பார்க்கப்படுகின்றது. இதுவரை காலமும் அந்தந்த பல்கலைக்கழகங்களில் புலமைசார் சமுதாயத்தினரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வறிக்கைகள் போன்றவை இருப்பின் நூல் நிலையத்திற்கு வழங்குமாறும் ஆய்வுகளில் ஈடுபடுகின்ற மாணவர்களுக்கு நூல்நிலையத்தின் ஒத்துழைப்பினை வழங்க இயலுமெனவும் சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்களின் சமூகவியல், உளவியல் மற்றும் குற்றவியல் பிரிவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**கண்காட்சி மற்றும் மக்கள் உபசரணை சேவைகளில் பங்கேற்றல்**

சிறுவர் பாதுகாப்பு சம்பந்தமாக சமுதாயத்தின் நேரடித் தொடர்பினைக் கட்டியெழுப்பும் பொருட்டு கண்காட்சிகள் மற்றும் மக்கள் உபகரண சேவைகளில் அதிகாரசபை பங்கேற்று வருகின்றது. இதன்கீழ் 17 நாட்களாக நடைபெற்ற 4 கல்வி மற்றும் வர்த்தக கண்காட்சி களில் அதிகாரசபையின் கண்காட்சிக்கூடம் பங்கேற்றுள்ளது. இதன்கீழ் இரு இலட்சத்திற்கு மேற்பட்ட பொதுமக்கள் விழிப்பூட்டப்பட்டுள்ளனர்.

**தேசிய சிறுவர் தினம்**

சிறுவர் பாதுகாப்பு பற்றி சமுதாயத்தை விழிப்படையச் செய்தவற்கான உபாய முறையெனும் வகையில் ஒவ்வோராண்டினதும் ஒக்டோபர் 01 ஆம் திகதி சிறுவர் தினம் கொண்டாடப்படுகின்றது. இத்தடைவ அதிகாரசபையின் சிறுவர்தின தொனிப்பொருளாக 'we all chidren the Future' என்பதே அமைந்தது. ஒக்டோபர் மாதம் 02 ஆந் திகதி இரத்மலான விழிப்புலனற்றோர் வித்தியாலயம் மற்றும் செவிப்புலனற்றோர் வித்தியாலயம் என்பவற்றை முதன்மையாகக் கொண்டு தேசிய சிறுவர் தின வைபவம் நடத்தப்பட்டது. இத்தினத்தில் கீழே காட்டப்பட்ட செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

- பிறேல் முறைக்கிணங்க தயாரிக்கப்பட்ட சர்வதேச சிறுவர் உரிமைகள் பற்றிய சாசனம் விழிப்புலனற்ற சிறுவர்களுக்காக வெளியிடப்பட்டது.
- சணச அபிவிருத்தி வங்கியின் பூரண நிதி அனுசரணையுடன் **'திய பெரலியா மல்ஷ மற்றும் ஹந்தட்ட அந்துரக்'** எனும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான விவரண

தொலைக்காட்சி நாடகங்கள் இரண்டு ஒளிபரப்பப்பட்டன.

- எமது அதிகாரசபையின் உதவிச் சட்டத்தரணி திரு. ரொஹான் விஜேசேகர எழுதிய **'மகவேற்பு, பிள்ளைகளின் பொறுப்பாண்மை, பாலகர்களின் உயிரை அழித்தல் தொடர்பான சட்டம்'** எனும் நூல் அரச சார்பற்ற அமைப்பான மயின்ட் சொலுசன் நிறுவனத்தின் பூரண நிதியனுசரணையின் கீழ் வெளியிடப்பட்டது.
- வீரோதார அப்பியாசப் புத்தக கம்பெனியுடன் கூட்டுத்சேர்த்து அக்கம்பெனி அப்பியாசப் புத்தகங்களின் பிற்பக்க அட்டையில் சிறுவர் நட்புமிக்க செய்திகள் அச்சிடப்பட்டன.
- வர்ல்ட் விஸன் அரச சார்பற்ற அமைப்பின் பூரண நிதி அனுசரணையின் கீழ் தேசிய சிறுவர் தினத்தின் நிமித்தம் ஒக்டோபர் முதலாம் திகதி லங்காதீப செய்தித்தாளில் முகிப்பக்க அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டது.
- சிறுவர் பாதுகாப்பு பற்றி சைகை மொழியில் ஆக்கப்பட்ட இறுவட்ட தயாரித்தல் இடம்பெற்றது.
- தேசிய சிறுவர் தினத்திற்குச் சமாந்தரமாக 16 மாவட்டங்களில் சிறுவர் தின தொனிப் பொருளை அடிப்படையாகக் கொண்டு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இதன் பொருட்டு 0.6 மில்லியன் ரூபா செலவாகியது.

## நிர்வாகப் பிரிவு

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் மனித வள முகாமைத்துவம், பௌதீக வளங்களை வழங்குதல் மற்றும் பராமரிப்பு நிர்வாகப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதிகாரசபையின் அலுவலக கட்டமைப்பிற்கிணங்க மொத்த ஊழியர் எண்ணிக்கை 94 ஆகும். இதில் 50 பேர் உதவி மாவட்ட இணைப்பாளர்களையும் உதவி மாவட்ட உள இணைப்பாளர்களாக மாவட்ட அலுவலகங்களுடன் இணைக்கப்பட்டு செயலாற்றுகின்றனர். தலைமையகத்தில் சேவைபுரிகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை 44 ஆகும். இவர்கள் 8 பிரதான பிரிவுகளில் இணைக்கப்பட்டுள்ளனர்.

2009 இன் இறுதியளவில் நிரந்தர ஊழியர்களின் எண்ணிக்கை 86 ஆகும். ஓர் ஊழியர் தற்காலிக அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தார்.

2009 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அதிகாரசபையில் 07 பதவி வெற்றிடங்கள் நிலவியதோடு இதில் 03 பதவி வெற்றிடங்களை ஆண்டில் முதலிரண்டு மாதங்கயில் நிரப்ப இயலுமாயிற்று. பணிப்பாளர்சபை செயலாளர், முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர், கிளிநொச்சி உதவி மாவட்ட உள இணைப்பாளர் ஆகிய பதவிகள் இவ்வாறு பூர்த்தி செய்யப்பட்ட பதவிகளாகும். யாழ்ப்பாண உதவி மாவட்ட இணைப்பாளர் பதவியை யூலை மாதத்தில் பூர்த்தி செய்ய இயலுமாயிற்று.

அதிகாரசபையில் வெற்றிடம் நிலவிய பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் பதவிக்காக சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சின் முன்னாள் செயலாளர் திரு. எம். சுமனதாச (இளைப்பாறிய) செப்ரெம்பர் மாததத்தில் அமைச்சின் விதப்புரையின் பேரில் நியமிக்கப்பட்டார்.

இவ்வாண்டில் 01 இடமாற்றம் மேற்கொள்ளப்பட்டது. இரத்தினபுரி உதவி மாவட்ட இணைப்பாளராக சேவையாற்றிய உத்தியோகத்தர் தனது பதவியில் இருந்து விலகியமையின் காரணமாக வெற்றிடமாகிய பதவி பதுளை உதவி மாவட்ட இணைப் பாளராய் இரத்தினபுரி மாவட்டத்திற்கு இடமாற்றம் வழங்குமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளின் பேரில் இடமாற்றம் வழங்கி பூர்த்தி செய்யப்பட்டது.

இவ்வாண்டில் அதிகாரசபையிலிருந்டது பதவி விலகிச் செல்லல் 08 இடம் பெற்றுள்ளது. இது 20008 ஆம் ஆண்டுடன் சார்புரீதியாக அதிகரிப்பாகும். அதிக சம்பளம் மற்றும் வசதிகளுக்காக பதவி விலகிச் செல்கின்றமையே பெரும்பாலும் பதவிவிலகல்களுக்கு காரணமாகும். எவ்வாறாயினும் அதிகாரசபையின் பயிற்றப்பட்ட உழைப்பாளிகள் பதவி விலகிச் செல்கின்றமை அதிகாரசபைக்கு நேர்கின்ற பாரிய நட்டமாகும்.

## 2009 ஆம் ஆண்டு நிர்வாகப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட தனித்துவமான பணிகள்

### மனிதவள அபிவிருத்தி

புதிய அறிவு மற்றும் திறன்களால் பூரணமான பதவியணியொன்று இருப்பது அதிகார சபைக்கு செல்வமாக அமைவதாலும் அதன் மூலமாக பிள்ளைகளுக்கு வினைத்திறன் மிக்கதும் பயனுறுதி கொண்டதுமான சேவையை வழங்க இயலுமென்பதாலும் மனிதவள அபிவிருத்தியை அதிகாரசபை முக்கியத்துவம் வாய்ந்ததெனக் கருதுகின்றது. அதற்கிணங்க பதவியணியின் திறன்களை விருத்தி செய்யும் பொருட்டு அதிகாரசபை இவ்வாண்டுக்குள் பெரும்பகுதி வேலைகளைச் செய்துள்ளது.

பல்வேறு பாடநெறிகளின் கீழ் உள்ளூர் பயிற்சி செயலமர்வுகளுக்காக 24 உத்தியோகத் தர்கள் ஆற்றுப்படுத்தப்பட்டதோடு வெளிநாட்டுக்கு பயிற்சி செயலமர்வுகளுக்காக இரண்டு உத்தியோகத்தர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர். அதிகாரசபையின் உதவிசட்ட உத்தியோகத்தரொருவர் இந்தியாவின் புதுடில்லியில் நடைபெற்ற சார்க் அங்கத்துவ நாடுகளில் ஆட்களை வியாபாரம் செய்தல் பற்றி சட்டத்தை அமுலாக்குபவர்களுக்கு விழிப்பூட்டுவதற்கான 2 நாள் செயலமர்வுக்காக ஆற்றுப்படுத்தப்பட்டதோடு அதிகார சபையின் நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர்கள் சார்க் அங்கத்துவ நாடுகளின் அங்கத்தவர்களுக்கு சிறுவர் உழைப்பு தொடர்பாக இந்தியாவின் உத்தர பிரதேசத்தில் நடைபெற்ற 2 நாள் செயலமர்வுக்ாக அனுப்பி வைக்கப்பட்டனர்.

2009 ஆம் ஆண்டில் அதிகாரசபையின் மனிதவள அபிவிருத்தி, தொடர்பில் மேற் கொள்ளப்பட்ட பயிற்சி செயலமர்வுகள் பற்றிய விபரங்கள் கீழேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| செயலமர்வு | இடம் | பங்கேற்கச் செய்விக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| மனஅழுத்த முகாமைத்துவம் | இலங்கை மன்றக் கல்லூரி | 09 |
| வாகன தரக்கட்டுப்பாடும் தரநியமமாக்கலும் | CETRAC | 01 |
| சேவைப் பயனுறுதி | SDFL | 05 |
| ஒட்டிசம் நோய் நீக்கல்துறை பயிற்றுவிப்பதற்கான பங்கேற்றல் வழிமுறை | ரெடின்லங்கா தனியார் கம்பெனி | 02 |
| பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிப்பதற்கான பங்கேற்றல் வழிமுறை | இலங்கை மன்றக் கல்லூரி | 01 |
| சாரதி தர முகாமைத்துவம் | CETRAC | 01 |

*அதிகாரசபையின் மனிதவள முகாமைத்துவத்திற்காக 0.256 மில்லியன் ரூபா பணம் செலவிடப்பட்டுள்ளது.*

**அதிகாரசபையின் மாவட்டங்களுக்கு இணைக்கப்பட்டு சேவையாற்றுகின்ற பதவியணிக்காக நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் (உதவி மாவட்ட இணைப்பாளர்கள் மற்றும் உதவி மாவட்ட உளநிலை இணைப்பாளர்கள்)**

அதிகாரசபையின் 32 மாவட்ட உத்தியோகத்தர்களுக்காக 'கனேடியன் றெட் குறொஸ்ஷ நிறுவனம் மூலமாக நடத்தப்பட்ட 'BESAFE' எனப்படுகின்ற சிறுவர் பாதுகாப்பு உபாய முறைகளைக் கற்பிக்கும் நிகழ்ச்சித்திட்டம் பற்றிய பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

அதிகாரசபையின் மாவட்ட உத்தியோகத்தர்களின் தொடர்பாடல் மற்றும் கணினி அறிவினை விருத்தி செய்யும் நோக்கத்துடன் ஓர் அரச சார்பற்ற அமைப்பான 'பர்சோன் கொம் நோய்' (persone come noi) எனப்படும் அரச சார்பற்ற அமைப்பின் நிதியனுசரணையின் கீழ் கணினிச் செயற்பாடு மற்றும் தொடர்பாடல் சாதனங்கள் பற்றிய ஒரு செயலமர்வு 2007.06.18 மற்றும் 19 ஆகிய இரு தினங்களில் இலங்கை மன்றக் கல்லூரியில் நடத்தப்பட்டது. இங்கு 27 உத்தியோகத்தர்கள் பயிற்சி பெற்றதோடு மாவட்டமொன்றுக்கு ஒரு லெப்டொப் கணினி வீதம் வழங்கப்பட்டது.

உதவி மாவட்ட உளநிலை இணைப்பு உத்தியோகத்தர்கள் 23 பேர்களுக்காக சிறுவர் உளநிலை சுகாதாரத்துறையின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் செயலமர்வு 2009.03.12 ஆந் திகதி இலங்கை மன்றக் கல்லூரி நிறுவனத்தில் பிளேள் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் பூரண நிதியனுசரணையுடன் நடத்தப்பட்டது.

கிழக்கின் நவோதயம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அதிகார சபையின் கிழக்கு மாகாணம் மற்றும் அதனைச் சார்ந்த மாவட்டங்களில் சேவையாற்றுகின்ற உதவி மாவட்ட உளநிலை உத்தியோகத்தர்களுக்கு தாய்மார் கிளினிக்குகளைச் சார்ந்ததாக சுகாதார சேவசிகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சிறுவர் பாதுகாப்பு பற்றி விழிப்பூட்டல் தொடர்பில் பயிற்சியளிக்கும் தொடரொன்று 13 உத்தியோகத்தர்களுக்காக நடத்தப்பட்டது.

**அதிகாரசபையின் புதிய வளவு**

அதிகாரசபைக்கு அத்தியாவசியமான துப்புரவேற்பாடு மற்றும் சுத்தஞ்செய்தல் சேவை, பாதுகாப்புச்சேவை, கணினி மற்றும் தொடர்பாடல் துணைக்கருவிகளின் பராமரிப்பு மற்றும் போக்குவரத்துச் சேவை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டது.

## நிதிப்பிரிவு

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பொது நிதி தொடர்பாக செயலாற்றுதல் மற்றும் கணக்குப்பதிதல் தொடர்பான பொறுப்பு நிதிப்பிரிவு மூலமாக ஈடேற்றப்படுகின்றது. அதிகாரசபைக்கு கிடைக்கின்ற அனைத்து வளங்களையும் உச்சமட்ட பயனுறுதியும் செயல்விளைவும் மிக்கதாக நெறிப்படுத்தலும், நிதிக் கட்டுப்பாட்டினைப் போன்றே நிதிசார் ஒழுக்கத்தைப் பேணி வருவதற்கான பங்களிப்பினை நல்குதலும் இப்பிரிவு மூலமாக ஈடேற்றப்படுகின்றது.

இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள், நிதி ஒழுங்குவிதிகள், தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகள், சனாதிபதி செயலாளரது சுற்றுநிருபங்கள், திறைசேரி சுற்றுநிருபங்கள், பொதுநிர்வாக சுற்றறிக்கைகள் மற்றும் இடைக்கிடையே அமைச்சினால் விதிக்கப்படுகின்ற நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டதாக நிதிக்கட்டுப்பாடு மேற்கொள்ளப் படுகின்றது.

**2009 ஆண்டில் நிதிப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட கடமைகள்**

- அதிகாரசபையின் நிதிச்செயற்பாடுகளன் மேற்பார்வையும் கண்காணிப்பும்
- பொதுதிறைசேரி மற்றும் பிற நியதிச்சட்ட முறையான நிறுவனங்களால் அறிமுகஞ் செய்யப்பட்டுள்ள முகாமைத்துவம் பற்றிய தகவல்களை அதிகாரசபைக்கு பெற்றுக் கொடுத்தல்.
- வருடாந்த கணக்குகளைத் தயாரித்தல் மற்றும் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு அவசியமான தகவல்களையும் அறிக்கைகளையும் வழங்குதல்
- தேவைகளுக்கேற்ப வருடாந்த வரவுசெலவு மதிப்பீடுகளைத் தயாரித்து திறைசேரி வருடாந்த நிதியேற்பாடுகளை ஒதுக்கிக் கொள்ளலும் வருடாந்த வரவு – செலவுக் கட்டுப்பாடும்
- தேவைகளுக்கேற்ப மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த கணக்கறிக்கைகளை அதிகார சபையின் முகாமைத்துவத்திற்கு, பணிப்பாளர் சபைக்கு, அமைச்சுக்கு மற்றும் பொது திறைசேரிக்கு சமர்ப்பித்தல்
- நிதியேற்பாடுகள் சம்பந்தமாக பாராளுமன்றக் குழுவினால் கோரப்படுகின்ற அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்.
- நிலையான சொத்துக்கள் கையிருப்புத் தொகைக்கான கையெழுத்துக்களைப் பெறுதலும் கட்டுப்பாடு சம்பந்தமான ஏற்பாடுகளை அமுலாக்குதலும்.
- 2009 ஆம் ஆண்டில் அதிகாரசபையில் நடைமுறைப்படுத்தப்பட்ட தேசிய செயற்பாட்டுத் திட்டக் கணக்குகள், இத்தாலி, யுனிசெப், சுனாமி ஐ. எல். ஓ ∴ ஐபெக் போன்ற கருத் திட்டங்களின் கணக்குச் செயற்பாடுகளை மேற்கொள்ளல்
- அதிகாரசபையின் ஏனைய பிரிவுகளால் கேட்கப்படுகின்ற நிதியறிக்கைகளை வழங்குதல்

மேலதிகமாக இந்த அதிகார சபையினால் வழங்கப்பட்டுவரும் நிகழ்ச்சித்திட்டங்கள்

* 2009 ஆம் ஆண்டின் சனவரி மாத சிறுவர் துன்புறுத்தலுக்கு எதிரான தினம் B.M.I.CH. நிகழ்ச்சி

* கிழக்கின் நவோதயம் நிகழ்ச்சித்திட்டம்

* சுகாதார சேவகிகள் / தாதியர்களுக்கு விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டம் - முல்லேரியாவ, கந்தான

* யுனிசெப் உதவியின் கீழ் அமுலாக்கப்பட்ட ஐனூ முகாம்களின் பிள்ளைகளுக்கான நிதி, உணவு மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்களை சேகரித்தல் மற்றும் வானவில் பால நிகழ்ச்சி

* திருகோணமலை, வெல்கம்வெஹெர மற்றும் மிஹிந்துபுர சிறுவர் மற்றும் இளைஞர் நிலையங்கள் சம்பந்தமான நிதிசார் செயற்பாடுகள்

முகாமைத்துவ கணக்காய்வுக்குழுவினால் தொகுக்கப்பட்ட 2009 ம் ஆண்டிற்கான ஆவணங்களை இயக்குனர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இந்த ஆவணமானது நிர்வாகம் நிதிச்செயற்பாடுகளை இந்தப்பிரிவு பரிசீலித்து. மேலதிகமாக நிதிக்கையேடு பொதுநிதிக்கொள்கை திணைக்களத்தினுடைய திறைசேரியின் சிபார்சிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**2009 ஆம் ஆண்டுக்கான மீண்டுவருஞ்செலவினப் பகுப்பாய்வு**

| விபரம் | மொத்தச் செலவின் சதவீதமாக |
|---|---|
| A சம்பளமும் வேதனமும் | 61.4% |
| B போக்குவரத்து | 2.1% |
| C வழங்கல், நுகர்வு | 5.3% |
| D பராமரிப்பு | 0.3% |
| E ஒப்பந்த சேவைகள் | 14.6% |
| F பிற | 2.6% |

**2009 ஆம் ஆண்டுக்கான மீண்டுவரும் செலவினப் பகுப்பாய்வு வரைபடம் சார்ந்ததாக**



**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை**

**2009/12/31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வருமான - செலவினக் கூற்று**

(ரூபாய்களில்)

| விபரம் | குறிப்பு | 2009 | 2008 |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு வருமானம்** | | | |
| மீண்டெழும் - பொது திறைசேரி | | 44,910,000.00 | 31,950,000.00 |
| ஏனைய நிறுவனங்கள் | 1 ஏ | 6,677,044.46 | 8,522,483.81 |
| பிற வருமானம் | 1 பி | 1,775,443.16 | 1,079,214.33 |
| செயற்பாட்டுத்திட்டம் - அமைச்சு | | 2,6000,000.00 | 9,915,000.00 |
| **மொத்த வருமானம்** | | **55,962,487.62** | **51,466,698.14** |
| **தொழிற்பாட்டுச் செலவு** | | | |
| ஊழியர் சம்பளம் | 2 | 27,586,576.18 | 23,357,348.76 |
| பிரயாணச் செலவு | 3 | 950,901,35 | 542,047.04 |
| வழங்கல், நுகர்வுச் சேவைகள் | 4 | 2,384,398.92 | 2,078,201.58 |
| பராமரிப்பு | 5 | 1,441,139.24 | 1,618,899.40 |
| ஒப்பந்தச் சேவைகள் | 6 | 6,539,298.15 | 3,985,561.35 |
| தேய்வு | 7 | 3,911,962.97 | 3,410,019.03 |
| பிற தொழிற்பாட்டுச் செலவுகள் | 8 | 1,170,025.10 | 1,229,272.83 |
| தேசிய செயற்பாட்டுத் திட்டம் - செலவு | 9 | 2,767,654.07 | 8,049,935.16 |
| கருத்திட்டச் செலவுகள் | 10 | 6,370,952.87 | 8,713,799.21 |
| சுனாமி உதவிக் கருதிட்டச் செலவு | 11 | 4,5085,016.94 | 4,049,536.18 |
| **மொத்த தொழிற்பாட்டுச் செலவு** | | **57,630,835.79** | **57,034,520.54** |

| | | | |
|---|---|---|---|
| தொழிற்பாட்டுப் பணிகள் மூலமாக | | | |
| பெற்ற மிகை (பற்றாக்குறை) | | (1,886,348.17) | (5,567,822.40) |
| நிதிச் செலவு | 12 | 15,704.29 | 16,239.87 |
| எதிர்பாரா செலவினம் | 13 | 550,000.00 | 740,723.19 |
| தொழிற்பாடு மற்றும் தொழிற்பாடு | | | |
| அல்லாத பணிகள் மூலமாகப் | | | |
| பெற்ற தேறிய மிகை (பற்றாக்குறை) | 14 | (2,234,052.46) | (6324,785.46) |

## அட்டவணைகள்

**அட்டவணை 1**

| ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி | **2009** | **2008** |
|---|---|---|
| கணினி | 7,000,000.00 | 7,000,000.00 |
| கட்டிடம் | 49,391,335.94 | 44,689,604.99 |
| மோட்டார் வாகனம் | 492,029.55 | 984,657.95 |
| தளபாடம் | 1,151,559.08 | 1,337,587.78 |
| உபகரணங்கள் | 2,465,655,21 | 2,503,086..25 |
| கருத்திட்ட நிலையான சொத்துக்கள் | | |
| ஐ. எல். ஓ. - கொள்திறன் விருத்திக் கருத்திட்டம் 2005 | 33,022.00 | 52,706.00 |
| ஐ.எல்.ஓ - கூட்டிவிடுதல் 2005 | 48,714.00 | 109,188.00 |
| உலக வங்கி சிறுவர் மற்றும் இளைஞர் மையங்கள் | 0.00 | 94,997.79 |
| சுனாமி பயிற்சிக் கருத்திட்டம் 2005 | 427,017.00 | 1,019,861.77 |
| சுனாமி உதவிக் கருத்திட்டம் 2005 | 905,126.77 | 1,019,861.77 |
| இத்தாலி - வளநிலையங்கள் கணினி | 1,025,957.50 | 498,075.00 |

| | | |
|---|---|---|
| இத்தாலி - வளநிலையங்கள் விவசாய உபகரணங்கள் | 21,854.00 | 32.781.00 |
| இத்தாலி - வளநிலையங்கள் தளபாடம் | 469.826.00 | 570,503.00 |
| இத்தாலி - வளநிலையங்கள் கருவிகள் | 72,781.80 | 88,377.90 |
| இத்தாலி - வளநிலையங்கள் இசைக்கருவிகள் | 36,190.00 | 54,285.00 |
| இத்தாலி - வளநிலையங்கள் விளையாட்டுச் சாதனங்கள் | 247,588.60 | 300,643.30 |
| உப மொத்தம் | 63,788,657.45 | 59,342,408.30 |

| **அட்டவணை 2** | **2009** | **2008** |
|---|---|---|
| முதலீடு மற்றும் சேமிப்பு | | |
| பணிக்கொடை கொடுப்பனவு நிதிய முதலீடு | 877,325.75 | 834.337.60 |
| சேமிப்புக் கணக்கு | 18,675,145.70 | 17,884,916.38 |
| இடர்க்கடன் மீளச்செலுத்தும் நிதியக் கணக்கு | 619,469.56 | 413,640.45 |
| உப மொத்தம் | 20,171,941.01 | 19,132,894.43 |

| **அட்டவணை 3** | **2009** | **2008** |
|---|---|---|
| வருமதியான கணக்குகள் | | |
| யுனிசெப் உளநிலை இணைப்பாளர் நிகழ்ச்சித் திட்டங்கள் | 235,379.00 | 235,379.00 |
| பண்டிகை முற்பணம் | 70,900.00 | 26,700.00 |
| இடர்க்கடன் | | |
| N.D.B மல்காந்தி | 2,666.00 | 29,570.00 |
| R. மணிசேகரன் | 15,895.99 | 33,258.00 |
| MGTL யசவர்தன | 31,650.09 | 52,750.05 |
| M.G.J விக்ரமசிங்க | 28,732.94 | 45,972.97 |
| வருமதியான கணக்கு - தோட்டச் சிறார்கள் | 0.00 | 96,112.00 |
| வருமதியான கணக்கு –-நம்பீனா / இஸ்ஸதீன் | 0.00 | 8,500.00 |
| நிதி முற்பணம் | 325,468.88 | 1,245,660.21 |

| | | |
|---|---|---|
